



# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
திநப்புயல்
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -293




# இரசாயன ஆயுதத்தை கொண்டே இனி உலகில் யுத்தம் இடம்பெறும்

# இலங்கையின் பொதுத்தேர்தலும் அரசியல்வாதிகளும்



# கொரோனா வைரஸும் கோட்டபாய ராஜபக்ஷவும்

# இரசாயன ஆயுதத்தை கொண்டே இனி உலகில் யுத்தம் இடம்பெறும்



உலகில் தற்பொழுது இரசாயன ஆயுதத்திற்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. உலகில் கூடுதலாக 2000 வைரஸ்களை கண்டு பிடித்த நாடு என்று பார்த்தால் அது சீன நாடே ஆகும். 42 வைரஸ்களை ஏனைய நாடுகள் கண்டுபிடித்துள்ளன. 3ஆம் உலகப்போர் இந்த நாட்டில் இடம்பெறுவதற்கான சமிக்கைகளாக அமெரிக்கா, ஈரான், வட கொரியா, சீனா போன்ற நாடுகள் தம்மை தயார்ப்படுத்தி வந்த நிலையில் அனைத்திற்கும் மேலாக சீனா முந்திக்கொண்டு வருகிறது. இரசாயன ஆயுதங்களின் மூலம் ஜப்பானில் முதன்முதலாக அமெரிக்காவால் தாக்குதல் இடம்பெற்றது. அதுவே இரண்டாம் கட்ட உலகப்போர். மூன்றாம் கட்ட உலகப் போராக இரசாயன ஆயுதத்தை கொண்டு தாக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாக சீன நாடு திகழ்கிறது. சீன நாட்டின் இரசாயன ஆயுதமே ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்டது. இதில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இது ஒருபுறமிருக்க சீன நாடு எவ்வாறு வல்லரசாக மாறிவந்தது என்றவொரு வரலாற்றை பார்க்க வேண்டியதன் அத்தியாவசியம் தற்பொழுது உலகில் வாழ்கின்ற அனைத்து நாடுகளுக்கும் அத்தியாவசிய ஒன்றாக மாறிவிட்டது.

அதன் படி பார்க்கும் போது உலகின் பொருளாதாரத்தை மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை கொரோனா என்ற ஒற்றைச் சொல் மாற்றியமைத்திருக்கிறது. இந்த வார்த்தைக்கு முன்னால் மனித சமூகம் இன்றைய நிலவரப்படி மண்டியிட்டு நிற்கிறது. இந்த துயரத்தை மனித சமூகம் நிச்சயமாக கடந்து வந்துவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் கொரோனா என்னும் தொற்றுக்கிருமியால் உலகில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் மாற்றம் அசாதாரணமானது. ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் மிஞ்சி ஒரு நாடு படையெடுக்க முடியுமா என்ற கேள்வி கிட்டத்தட்ட அரை நூற்றாண்டாக விடை தெரியாமல் இருந்து வந்தது. கொரோனாவை வைத்து வல்லரசு என்ற ஆதிக்க வலயத்திற்குள் சத்தமின்றி நுழைய காத்திருக்கிறது சீனா.

அமெரிக்க ஐரோப்பிய பொருளாதார சூழல் ஆட்டம் கண்டிருக்கும் வேளையில் சீனா வல்லரசு நாடாக உரு எடுத்துள்ளதா? கொரோனாவிற்கு பின் சீனாவின் பொருளாதாரத்தை சார்ந்து தான் உலக நாடுகள் இயங்க வேண்டும் என்ற கட்டமைப்பு ஏற்பட்டிருக்கிறதா? கொரோனா என்னும் தொற்றுக்கிருமி மூலமாக சீனா இந்த இடத்தை அடைந்ததா? அல்லது இதற்கு முன்பாகவே இந்த இடத்தை அடைவதற்கான வியூகத்தை சீனா உருவாக்கிக்கொண்டதா? சீனாவை எதிர்த்து அமெரிக்கா தற்பொழுது மட்டும் தான் நிர்கதியாய் நிற்கிறதா? ஜீ ஜிம்பிங்கின் வியூகத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட்ரம்ப் அடுத்து என்ன செய்வது என்பது தெரியாமல் நிற்கிறாரா? அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்றது முதலே தவறான காய்களை நகர்த்தி அமெரிக்கா மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளையும் நிர்க்கதியாய் ஆக்கி வல்லரசு என்னும் வாய்ப்பை சீனாவிற்கு வழங்கி விட்டாரா என்று அடுக்கடுக்கான பல கேள்விகள் விடை தெரியாமல் தொக்கி நிற்கின்றன.

எது எப்படியிருப்பினும் இனி வரும் காலங்களில் சீனா தான் வல்லரசு நாடு என்ற சில பொருளாதார நிபுணர்கள் ஆருடம் வாசிக்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி பார்த்தால் இந்த திசை மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்பதை அறிந்து கொள்ள கால சக்கரத்தின் சில ஆண்டுகள் பின்னோக்கி பயணிக்க வேண்டியிருக்கிறது. 2010 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்த ட்ரம்ப் சீனா தமக்கு தந்திரமிக்க போட்டியாளராகவும் தமது வேலைவாய்ப்பை திருடிக்கொள்ளும் நாடாகவும் உள்ளதாக கடுமையாக விமர்சித்து பேசினார். இனிவரும் காலங்களில் வல்லரசு என்னும் நிலையை அமெரிக்கா தக்க வைக்க வேண்டும் என்றால் சீனாவுடன் நாம் வர்த்தக யுத்தம் நடத்த வேண்டும் என்றும் சீனாவுடன் நாம் எவ்வித வரத்தக உறவையும் வைத்துக்கொள்ளாமலும் இருந்தால் நம்மால் ஏராளமான டொலர்களை சேமிக்க முடியும் என்றும் பகீரங்கமாகவே தெரிவித்தார்.

சீனா குறித்த ட்ரம்ப்பின் இந்த வார்த்தைகள் அடுத்தடுத்த காலங்களில் பல படிகள் முன்னேற்றமடைந்து சீனாவின் பொருளாதாரத்தையே நிர்மூலமாகாக்கும் வியூகம் தன்னிடம் உள்ளதாக காட்டிக்கொண்டார் ட்ரம்ப். இதைத் தொடர்ந்து அமெரிக்காவை தோற்கடித்து அதனை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள சீனா விரும்புகிறது என டுவிட்டரில் 2011 இல் குறிப்பிட்டார் ட்ரம்ப். 2014 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பிரச்சார கூட்டம் ஒன்றில் ஆவேசம் பொங்க பேசிய ட்ரம்ப் சீனா பின்பற்றும் வர்த்தக நடைமுறைகள் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். சீனா எங்கள் தேசத்தை பலாத்காரம் செய்வதை இனியும் அனுமதிக்க முடியாது என்று அதிரடியாக கூறினார். ட்ரம்ப்பின் அந்த உரையை கேட்ட அமெரிக்கர்கள் எவருமே தங்கள் நாட்டை வல்லரசு நாட்டிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்த்திச் செல்ல ஒரு தூதுவன் வந்து விட்டார் என்று தான் நினைத்தார்கள். ஆனால் நிலையோ தலைகீழாக மாறியது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதிவியேற்ற நாளிலிருந்து சீனா குறித்த அவரது பார்வையே மாறிப்போனது. குறிப்பாக வரலாற்றில் சீனா அடைந்திருக்கும் இந்த உயரம் அசாத்தியமானது என ஏகத்துக்கு புகழ்ந்து தள்ளினார். எந்த சீனாவின் பொருளாதாரத்தை அதிபர் ட்ரம்ப் விமர்சித்தாரோ, அதே ட்ரம்ப் சீனாவின் பொருளாதாரத்தை உயர்த்தி பேசியதை அமெரிக்க மக்கள் ஏக கடுப்பில் தான் பார்த்தனர். இந்த சூழலில் தான் சீன கம்னியூசிய கட்சியின் 9வது மாநாட்டில் ஜிம்பிங் மீண்டும் ஐந்தாண்டு காலத்திற்கு அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகின் அதிகாரமிக்க தலைவராக ஜீ ஜிம்பிங் உயர்ந்து வருவதாக ஊடகங்கள் அவரை புகழ்ந்து தள்ளின. அதற்கேற்ப வடகொரியா விவகாரம், தாய்வான் அரசியல் விவகாரத்தில் ஜீ ஜிம்பிங் செய்த மத்தியஸ்தமும் அமெரிக்காவின் தலையீட்டிற்கு எதிராக மௌனமாக காய் நகர்த்தியதற்கும் அமெரிக்காவால் எதிர்த்து பேச முடியவில்லை. இதற்கு முகாந்தரம் இல்லாமல் இல்லை. அமெரிக்காவின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் கேந்திரமாக சீனா உருவெடுத்திருக்கிறது. ஏனைய நாடுகளின் கடன் பத்திரத்தை அதிகம் வைத்துள்ள நாடாக சீனா உருவெடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் கடன் பத்திரங்கள் தற்போதைய சூழலில் சீனா வசமுள்ளன. இந்நிலையில் தான் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் வர்த்தக போர் ஏற்படும் சூழல் கடந்த 2018 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

சீனாவின் இறக்குமதி பொருட்களிற்கான வரியை அமெரிக்கா தடாளடியாக உயர்த்த முடிவு செய்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சீனாவும் 1.1 ரில்லியன் கடன் பத்திரங்களை விற்பதாக மிரட்டியது. அமெரிக்காவின் பத்திரங்களை விற்பதால் அமெரிக்காவின் நிதி சந்தைகள் மட்டுமன்றி உலக நிதி சந்தையையும் அது சீர்குழைக்கும். வட்டி வீதங்கள் வரலாறு காணாத வகையில் உயரும். அத்துடன் சீனா அமெரிக்கா இடையே மிகப்பெரிய பதற்றத்தை ஏற்படுத்தும். இதனால் தான் வடகொரியா விவகாரமாகட்டும் தாய்வான் விவகாரமாகட்டும் அனைத்திலும் சீனாவிடம் அமெரிக்கா அடிபணிந்து செல்கிறது என்று கூறப்படுகிறது. அதிபராக ஜீ ஜிம்பிங் தேர்ந்தெடுக்கப்பட்ட போது உரையாற்றியதில் அடுத்த 30 ஆண்டுகளில் சீனா தான் வல்லரசு நாடாக இருக்குமென பகீரங்கமாகவே அறிவித்தார். சீன அதிபர் ஜீ ஜிம்பிங்கின் இந்த உரை நிச்சயமாக அமெரிக்கர்களை கடுப்பில் ஆழ்த்தியிருக்கும். ஆனால் அதிபர் ட்ரம்ப்போ இந்த கருத்தை பற்றி எந்த கருத்தையும் கூறாமல் நீங்கள் அசாதாரணமான உயரத்தை அடைந்திருக்கிறீர்கள் என மீண்டும் ஏகத்துக்கு புகழ்ந்து தள்ளினார்.

சீன விவகாரத்தில் அமெரிக்க அதிபர் அமைதி காக்க இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ஜீ ஜிம்பிங் வல்லரசு கனவை நோக்கி காய்களை நகர்த்த தொடங்கினார். குறிப்பாக இந்த இடத்தில் தான் தென் சீன கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் முயற்சியில் ஜீ ஜிம்பிங் இறங்கினார். இதில் சீனாவின் கட்டுப்பாட்டை தகர்த்தும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் முயற்சி தோல்வியில் முடிய மூக்குடைபட்டு நகர்ந்தமர்ந்தார் ட்ரம்ப். எண்ணெய் வளமிக்க தென் சீனா கடல் பகுதியை சொந்தம் கொண்டாடுவதில் வியட்னாம், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்வான் உள்ளிட்ட நாடுகளுடன் சீனா மோதலில் ஈடுபட்டு வந்தது. தென் சீன கடல் பகுதியில் சீனா அத்துமீறி ஆதிக்கம் செலுத்துவதாக பிலிப்பைன்ஸ் சர்வதேச மத்தியஸ்தள தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்தது. பிலிப்பைன்ஸ் தொடுத்த வழக்கில் சீனாவிற்கு மூக்குடைபடும் வகையில் தென் சீனா கடலில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் சீனாவிற்கும் சட்ட ரீதியாக எந்த முகாந்தரமும் இல்லையென அதிரடி தீர்ப்பு வெளியானது. இருப்பினும் அதைப்பற்றி கவலைப்படாத சீனா இயற்கை எரிவாயு எண்ணெய் வளமிக்க தென் சீன கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலை நாட்டும் முயற்சியிலே இறங்கியது.

இதற்காக தென் சீன கடல் பகுதியில் செயற்கையாக தீவுகளை அமைத்து விமான படைத்தளத்தை சீனா உருவாக்கியது. இந்த இடத்தில் தான் தென் சீன கடல் பகுதி சர்வதேச எல்லையாக கூறி அமெரிக்காவும் களத்தில் இறங்கியது. அதனால் சீனாவில் செயற்கை தீவுகள் அமைக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே அதாவது செயற்கை தீவுகள் இருந்த பகுதியிலிருந்து சுமார் 12 கடல் மைல் தொலைவில் அமெரிக்க போர்க் கப்பல்கள் குவிக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த சீனா அமெரிக்கா தனது போர்க் கப்பல்களை திரும்ப தரவில்லையென்றால் போர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழல் ஏற்படுமென எச்சரிக்கை விடுத்தது. அதே சமயத்தில் சர்வதேச மத்தியஸ்தள தீர்ப்பாயத்தையும் நாடிய பிலிப்பைன்ஸையும் தனது ஆதரவு அணியாக மாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டது. இதற்கு கைமேல் பயனாக அமெரிக்காவிற்கு ஆதரவாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பிலிப்பைன்ஸ் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டை கைவிட்டு சீன ஆதரவு நிலைப்பாட்டை கையிலெடுத்தது. இதனால் தென் சீன கடல் விவகாரத்தில் சீனாவிடம் தோல்வியை தழுவிய அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது.

தென் சீன கடல் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டுள்ள சீனா தனது வல்லரசு கனவை காண அடுத்த அஸ்திரமாக பட்டுப்பாதை திட்டத்தை கையிலெடுத்தது. இதற்காக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் அல்ல தனது ஆதரவு நிலைப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியது. சீனாவின் இந்த முயற்றிக்கு பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவிக்காது என நம்பிய சீனா, இந்தியாவை தனது கட்டுக்குள் கொண்டுவரவும் திட்டமிட்டது. அருணாசலம் பிரதேசம் டோக்கலா முகாரம் உள்ளிட்டவற்றில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மோதல் போக்கு நீடித்து வருகிறது. அருணாசல பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர துடிக்கும் சீனா டோக்குலா பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டு தனது இராணுவத்தை ஊடுறுவச் செய்தது. இதனால் சுதாரிச்சுக் கொண்ட இந்திய இராணுவம் டோக்குலாம் பகுதிக்குச் சென்று சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சியை தடுத்து நிறுத்தியது.

அப்பொழுதே பாதுகாப்பு துறை அமைச்சர் ராப்னாப் சிங் களத்திற்கே சென்று இந்திய இராணுவத்திற்கு ஆலோசணைகளை வழங்கினார். இந்தியா சுதாரிச்சுக் கொண்டதை அறிந்த சீனா டோக்குலா முகாரத்திற்கு பின்வாங்குவதை போன்ற ஒரு நடிப்பை வெளிப்படுத்தியது. இருந்தும் தெற்காசிய பிராந்தியத்தில் தனக்கு போட்டியாக இருக்கும் இந்தியாவை கட்டுக்குள் கொண்டு வரவும் அதன் இராணுவ நடவடிக்கைகளை வேகு பார்க்கவும் ஒரு புதிய முயற்சியை கையில் எடுத்தது. அதற்கு சீனா வைத்த பெயர் அம்பந்தோட்ட துறைமுக சூழ்ச்சி. இலங்கையிலுள்ள அம்பந்தோட்ட துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலமாக அந் நாட்டை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதுடன் இந்தியாவையும் கட்டுப்படுத்த முடியுமென சீனா நம்புகிறது. இந்தியாவுடன் போர் என்ற நிலை வந்தால் இலங்கையிலிருந்து தமிழகத்தை தான் முதலில் சீனா தாக்கக்கூடும்.

தொடரும்...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா வைரஸின் தாக்கம் முற்றாக ஒழித்த பின்னரே தேர்தலை நடத்துவது சிறந்தது

இன்றைய காலக்கட்டத்தில் உலகளாவிய ரீதியிலும்,நாடளாவிய ரீதியிலும் கொரோனா வைரசின் தாக்கம் என்பது தலைவிரித்து ஆடுகிறது எனலாம். இவ்வாறான காலக்கட்டத்தில் தேர்தலை நடத்துவது தொடர்பில் கோட்டபாய ராஜபக்ஷ தரப்பு தீவிரம் காட்டி வருகின்றது இவ்வாறான நிலைமை நாட்டில் தொடருமாக இருந்தால் மக்கள் வாக்களிப்பதற்கே வீதிகளில் வரமாட்டார்கள். கடைசியில் வீடு வீடாக தொகுதி தொகுதியாக நடமாடும் தேர்தல் பூத்,அல்லது கணனி மயப்படுத்தப்பட்ட முறைகளே நாட்டில் பேணப்பட வேண்டும். குறிப்பாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமாயின் நாட்டின் பொருளாதாரம் பாரிய வெற்றிய கண்டிருக்க வேண்டும். தற்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் தேர்தலுக்கான முன்னெடுப்புகளை தமிழ் அரசியல் தலைமைகளும் முன்னெடுத்து வருகின்றன. மக்களுக்கான நிவாரணப்பணிகளை தமது சொந்த பணத்தில் இருந்து செலவிடுகிறார்கள் எல்லாம் தேர்தலுக்கான ஒரு நாடகமே!

கோட்டபாய ராஜபக்ஸவை பொறுத்த வரையில் சீன நாட்டு அரச அதிபரை போல் தன்னை பரம்பரை பரம்பரையாக வளர்த்துக்கொள்ள விரும்புகிறார். அந்நாட்டின் இராணுவ ஆட்சியே இருந்து வருகின்றது ஆனாலும் ஜனநாயகம் இடம்பெறுவதாக பறைசாற்றுகிறது சீனா. இலங்கைக்கான பெரும்பாலான உதவிகளை சீன நாடு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வழங்கி வருகிறது. சீன காலணியாக அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு நகரம் மாறி வருகின்றது. அதிவேக சீனாவினுடைய கட்டுமான வளர்ச்சிகளை நாம் கண்ணூடாக காணலாம்.

இலங்கையில் போர் இடம் பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் சர்வதிகார நாடுகள் இலங்கை தீவில் தமது செயற்பாடுகளை துரித கதியில் வளர்ச்சிப்படுத்துவதற்குதமிழீழவிடுதலைப்புலிகள் பெரும் தடையாக இருந்தார்கள் இதனால் இலங்கையின் பெருளாதாரமும் இந்நாட்டில் பாதுகாப்பும் சரியாக இடம்பெற்றது.

தற்போதைய காலக்கட்டத்தில் எமது நாட்டை முதலாவதாக பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. சர்வதேச நாடுகள் பல சீனாவினுடைய பொருளாதாரத்தை முடக்கி உள்ளது ஏற்றுமதி இறக்கு மதியை இல்லாமல் செய்திருக்கின்றது.

இதனுடைய காரணம் என்ன வென்றால் குறித்த சீன நாடு ஆனது எதிர்வரும் காலங்களில் இரசாயன ஆயுதங்களை கொண்டு தங்களுடைய நாட்டை அழிக்கும் என்பதாகும். சீன நாட்டு கம்பனிகள் இலங்கையில் உருவாக்கப்படுகின்ற போது குறித்த கம்னிகளில் இவ்வாறான இரசாயனங்கள் கையாளப்படுவது கண்டறியப்பட முடியாது போகும் இலங்கையை பொறுத்த வரையில் சீன நாட்டு உதவி என்பது அத்தியாவசியம் இல்லாத ஒன்றாக மாறிப்போகும். வேக வேகமாக பொருளாதார ரீதியில் தனது ஒத்தாசைகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் தான் சீனாவினுடைய இலங்கையின் இருப்பு உறுதிப்படுத்தப்பட போகின்றது.

தமிழ் மக்களுக்கான தேசியம், சுயநிர்ணயம் என்பது மக்களுக்கு கிடைத்தாக வேண்டும் என்பது தமிழ் அரிசியல் தலைமைகளின் எதிர்பார்ப்பு . அந்த எதிர்பார்ப்பின் அடிப்படையிலே இன்னனும் தமிழ் மக்களுடைய அரசியல் நகர்ந்து செல்கின்றது. இதனை அரசியல் இலாபம் நோக்கி செயற்படுத்துகின்ற அரசியல் தலைமைகள் இன்னுமும் தமிழ் மக்கள் பற்றி சிந்திக்காமல் இருக்கின்றார்கள் குறித்த அரசியல் தலைமைகளினால் தமிழ் மக்களுடைய இலக்கு தவறிப்போகின்றது என்று கூற வேண்டும்.

வருகின்ற பொது தேர்தலானது கொரோனாவை மையப்படுத்தி அல்லது அதனூடாக செய்யப்பட்ட உதவிகளை மையப்படுத்தியே வரப்போகின்றது இதற்கு தமிழ் மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**100** கெரில்லாப் படைப்பிரிவு

### கெரில்லா ஒரு போர்வீரன்



கெரில்லாவின் அசாதாரண வாழ்வு நிபந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றன பின்வருவனவற்றை அவனிடம் வேண்டிநிற்கின்றன. அதாவது அவன் பூரணமான உடலியல் ஒழுக்கப் பண்புகளையும் அத்துடன் அறிவுக்கூர்மையையும் கொண்டிருக்க வேண்டும். அப்படியில்லாதவிடத்து அவனால் கெரில்லாச் செயற்பாட்டு நிபந்தனைகளுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும் அவனுக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றவும் முடியாது.

சரி எவ்வாறான நிபந்தனைகளைக் கெரில்லா அவசியம் நிறைவேற்ற வேண்டும்? கெரில்லா தான் செயற்படுகின்ற பிரதேசத்தைச் சேர்ந்தவனாக இருப்பது மிகவும் முக்கியமானதாகும். இப்படியான சந்தர்ப்பத்தில் அவனிடம் இரக்கம் கொண்ட மக்களைக் கொண்டவனாக அவன் அங்கே இருப்பான். அந்த மக்களிடத்தில் அவன் புகலிடம் பெறலாம். அந்தப் பிரதேசம் அவனுக்கு அத்துப்படியாக இருக்கும். இது கெரில்லாப் போராட்டத்தின் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். அவனுக்கு அப்பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்கள் யாவும் எப்பொழுதும் அறியக்கூடியவையாகவே இருக்கும். ஆகவே அவனால் அங்கே பாரிய வேலைகளைச் செய்யக் கூடியதாக இருக்கும். மேலதிகமாக இங்கே கூறவேண்டிய விடயம் யாதெனில் இவ்வாறான சூழ்நிலைகளில் கெரில்லா தனது மற்றும் தனது அயலவரின் சொத்துக்களைக் காக்கின்றான் என்ற அவனும் அவனுக்கு நெருக்கமானவர்களும் ஆவல் கொண்டுள்ள சோசலிச அமைப்பின் தோற்றத்திற்காகப் போராடுகின்றான் என்ற அவனின் உணர்வு அவனது செயற்பாடுகளுக்கு ஊக்கமுமளிக்கின்றது.

கெரில்லா – இரவில் செயற்படுகின்ற போர்வீரன் இதன் அர்த்தம் யாதெனில் இரவுச் சமரில் செயற்பட இன்றியமையாத சகல பண்புகளையும் அவன் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். அவன் தந்திரத்தால் எதிரியை ஏமாற்றத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். சமதரையில் அல்லது மலைப்பகுதிகளில் சமர் நடைபெறும் இடத்திற்கு யாருக்கும் தெரியாமல் சென்று திகைப்பேற்படுத்தல் எனும் காரணியைப் பயன்படுத்தி (இவ்வகைச்சமர்நடவடிக்கைகளின் மிக முக்கிய நிபந்தனையாகும்) எதிரிமீது தாக்க வேண்டும். இவ்வாறாக எதிரியின் முகாமில் பயப்பீதியை உண்டாக்கி அவனை நகர்ந்தவாறு கெரில்லா தாக்க வேண்டும். தோழர்கள் மத்தியில் மிகச்சிறிய தவறும் விடாமல் எதிரியின் பலவீனமான ஒவ்வொரு பக்கத்தையும் பயன்படுத்தித் திடமான கொடிய சமரைத் தொடங்க வேண்டும். தந்திரோபாயச் சூழ்நிலையை மாத்திரம் கருத்திற்கொண்டு எதிரிமீது அவன் சுழல்காற்றாகப் பாய்ந்து தனது பாதையிலுள்ள சகலரையும் சகலதையும் துடைத்தழித்துக் கொல்வான். இதன் போது தண்டனை பெற வேண்டி ஒவ்வொருவரையும் தண்டித்து எதிரிச் சிப்பாய்களுக்குப் பயத்தை உண்டாக்கி அதே நேரத்தில் ஆயுதமற்றவர்களிடத்திலும் தோல்வியடைந்தவர்களிடத்திலும் இரக்கம் காட்டி போரில் இறந்தவர்களைக் கௌரவித்துக் கெரில்லா செயற்படுவான்.

கெரில்லாவின் கடமை –விழுப்புண்ணடைந்தவர்களுக்கு இரக்கம் காட்டுதல் நிச்சயமாக அவர்கள் மரண தண்டனை பெறுகின்ற அளவுக்குக் குற்றவாளிகளாக இல்லாதவிடத்து அவர்களுக்குச் சாத்தியமான மருத்துவ உதவியை வழங்குதல் ஆகும். எதிரிப் படைவீரனைக் கைதியாகப் பிடிக்கக்கூடாது. எதிரி அணுக முடியாத பெரிய கெரில்லா முகாம் இருக்குமானால் கைதியைப் பிடிக்கலாம். ஏனெனில் எதிரிக்குக் கெரில்லா இராணுவம் இருக்கின்ற இடத்தையும் அதனது ஆளணி எண்ணிக்கை பற்றிய தகவலையும் கைதி கொடுக்கலாம். இந்நிலைமையில் கைதி அப்பிரதேச மக்களுக்கும் கெரில்லாப் படைப்பிரிவுக்கும் ஆபத்தானவனாவான். கைதி பாரதூரமான குற்றவாளியில்லை என்றால் அவன் மேல் எடுக்க வேண்டியதகுந்தநடவடிக்கைகளை எடுத்துவிட்டு அவனை விடுவிக்க வேண்டும்.

அவசிய நடவடிக்கையின் போது மாத்திரமே கெரில்லா தனது வாழ்வை ஆபத்துக்குள்ளாக்கிச் செயற்பட வேண்டும். அதேநேரத்தில் வேண்டிய தருணத்தில் சந்திக்காமல் தனது வாழ்வை அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும். அவன் அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன் தேவையற்ற ஆபத்துக்கு ஆளாகவும் கூடாது. பாதகமான விளைவுகளிலிருந்து அல்லது கொல்லப்படுதலில் இருந்து தப்புவதற்கான சகல முன்னேற்பாடான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஆகவே தான் ஒவ்வொரு சமரிலும் எதிரியின் சேமப்படைகள் வந்துசேரக்கூடிய சகல நிலைகளையும் தற்காப்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் மூலம் முற்றுகையைத் தவிர்க்கலாம். முற்றுகையினால் பொருட்சேதம் மாத்திரமன்றி உளச்சேதமும் ஏற்படும் ஆபத்திருக்கின்றது. ஏனென்றால் இது வெற்றிகரமாகச் சமர் முடியும் என்ற நம்பிக்கையில் இழப்பை ஏற்படுத்துகின்றது.

எந்த ஆபத்தின்போதும் கெரில்லா துணிவைப் பேண வேண்டும். சமர் நடவடிக்கையின் அனுகூலமான மற்றும் பிரதிகூலமான பக்கங்களைச் சரியாக ஆராய வேண்டும். எப்பொழுதும் சகல எதிர்பார்க்காத சம்பவங்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். சாத்தியமான மற்றும் சாத்தியமற்ற நிலைமைகளின் ஆய்வுகள் அனுகூலமான விளைவுகளைத் தராது என்ற சூழ்நிலைகளிலும் சரியான முடிவு எடுக்கத் தெரிய வேண்டும்.

சமரில் இறந்து போகாமலிருப்பதற்காகச் சூழலோடு ஒன்றித்துப்போகத் தெரிந்திருக்க வேண்டும். அவனைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சூழலோடு ஒன்றித்து அதனைத் தனது சகாக்களாக்கி அங்கேவேரூன்றியிருக்கவேண்டும். அத்துடன் அவன் வேகமாக நிலையறியக்கூடியவனாகவும் நிலைமைகளைச் சமாளிக்கக்கூடியவனாகவும் தீர்க்கமான செயற்பாடுகளால் சம்பவங்களைத் தனக்குச் சாதகமாக மாற்றும் திறனைக் கொண்டவனாகவும் இருக்க வேண்டும்.

கெரில்லா பிரதேசத்துடன் ஒன்றித்துப்போதலும் அவனது நுண்ணறிவும் எதிரியைப் பயமுறுத்துகின்ற ஆயுதமாகும்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# இலங்கையின் பொதுத்தேர்தலும், அரசியல்வாதிகளும்




தேர்தலை நடத்துவது மற்றும் நாடாளுமன்றத்தை கூட்டுவது குறித்து உயர் நீதிமன்றத்தை நாடவேண்டிய அவசியமில்லை, பொதுத் தேர்தலினை நடத்துவதற்கான புதிய திகதியை தேர்தல்கள் ஆணைக்குழுவே அறிவிக்க முடியும் என ஜனாதிபதியின் செயலாளர் பி.பி ஜெயசுந்தர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், “2020.03.31 மற்றும் 2020.04.01 ஆம் திகதிகளில் தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மக்கள் குடியரசின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பணிகள் பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பப்படும் கடிதம் எனது அலுவலகத்திற்கு கிடைக்கு முன்னர் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டிருப்பதும், அக்கடிதங்கள் வேறு நபர்களுக்கும் பிரதிகள் குறிப்பிடப்பட்டிருப்பதையிட்டும் நான் ஆச்சரியமடைகின்றேன்.

கீழ்வரும் தகவல்களை சுருக்கமாக குறிப்பிடுவது பொறுத்தமானதாகும்.

1. 2020.03.03 ஆம் திகதிய 2165/8ஆம் இலக்க வர்த்தமானி மூலம் 2020.03.02 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்றத்தை கலைத்து புதிய நாடாளுமன்றத்தை 2020.05.14 ஆம் திகதி கூட்டுவதற்கு திகதி குறிப்பிடப்பட்டது.

2. அவ்வறிவித்தலின் மூலம் புதிய நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்கு 2020.04.25 ஆம் திகதி குறிப்பிடப்பட்டது.

3. அதன் பின்னர்,
(அ) பல்வேறு அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான தங்களது விருப்பத்தை தெரிவித்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு சுயாதீன குழுக்கள் நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 15வது உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்கான வேட்பாளர்களின் பெயர்களை உள்ளடக்கிய வேட்புமனுக்களை சமர்ப்பித்தனர்.

(எ) அதில் வேட்பாளர்களின் எழுத்து மூல அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 16 மற்றும் 17 வது உறுப்புரையின் பிரகாரம் கட்டுப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

குறித்த நிலைமைகளின் கீழ் பல சுயாதீன வேட்பாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்

(அ) நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட கட்டளை,
(ஆ) தேர்தல் திகதி குறிக்கப்பட்ட கட்டளை,

(இ) வேட்புமனு கையளிக்கும் திகதி மற்றும்

(எ) குறித்த தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் வேட்புமனுக்களை சமர்ப்பித்தல்

ஏற்றுக்கொண்டு உரிய முறையில் செயற்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 24வது உறுப்புரையின் பிரகாரம் 24(1) உறுப்புரையின் A முதல் D வரையான உட்பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை குறிப்பாக எடுத்துக்காட்டி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வர்த்தமானி மூலம் அறிவிப்பொன்றை செய்திருக்க வேண்டும். 2020.03.20 ஆம் திகதிய 2167/12 வர்த்தமானி அறிவித்தலில் 24(1) உறுப்புரையின் A மற்றும் C உட்பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மட்டும், அதாவது அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் 2020 ஏப்ரல் 25 ஆம் திகதி காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை வாக்களிப்பு இடம்பெறும் என்றும் வாக்களிப்பு இடம்பெறும் தேர்தல் மாவட்டங்களையும் குறிப்பிட்டு அறிவிப்பொன்று வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட 2020.03.21 ஆம் திகதி 2167/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் 2020.04.25 ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என்றும், 2020.04.30ஆம் திகதி முதல் 14 நாட்களுக்குப் பின்னர் வரும் ஒரு நாளில் தேர்தல் நடைபெறும் திகதி குறிப்பிடப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. 2020.04.25ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாதாயின் 24(03) உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் தேர்தலை நடத்தக் கூடிய வேறு திகதியொன்றை விசேடமாக குறிப்பிட 24 (3) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழு கடப்பாடுடையது என்பதை கவலையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அதில் தேர்தல் நடத்தப்படும் திகதி, நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 24(3) உறுப்புரையின் கீழ் பகிரங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்கு 14 நாட்களுக்குப் பின்னராக இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள ஆலோசணையின் பெயரில் 2020.05.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது என்ற அறிவித்தலை தற்போதைய சந்தர்ப்பத்தில் செய்ய முடியாது. தேர்தல் வாக்களிப்பு இடம் பெறும் திகதியை குறிப்பிடுவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்பதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புக்களில் தலையிட ஜனாதிபதி எண்ணவில்லை. பிற்போடப்பட்ட தேர்தல் குறித்து அறிவிக்கும் கால எல்லை நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 24(3) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 14 நாட்களுக்கு குறையாத காலமாகும் என்று அதாவது, பிற்போடப்பட்ட தேர்தல் வாக்களிப்பை 15வது நாளிலேனும் நடத்த முடியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு இந்நாட்டில் உள்ள மக்களுக்கு உரிமையுள்ளது என்றும் அது அவர்களது தனி உரிமை என்பதையும் நான் குறிப்பிட வேண்டியதில்லை. மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் சாரம்சம்படுத்தி நோக்கும் போது அரசியலமைப்பின் 129 அத்தியாயத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தும் பிரச்சினை எழவில்லை என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு எனக்கு ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் பொதுத் தேர்தல் ஒன்று இலங்கையில் இடம்பெறுவது என்பது உறுதியாகியுள்ள நிலையில் அரசியல்வாதிகள் பலரும் தமது தேர்தல் பிரச்சாரத்தை ஏதோவொரு வகையில் முன்னெடுத்து வருகிறார்கள். தற்பொழுது புதுப்புது கட்சிகளும் களமிறங்கியுள்ளன. தேர்தல் என்று வந்துவிட்டாலே அரசியல்வாதிகள் தமது சொந்தப் பணத்தை ஒரு முதலீடு செய்வது போலவே செய்வார்கள். குறைந்தபட்சம் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெறும் ஒருவர் 1 கோடி ரூபாயாவது செலவளிக்க வேண்டும். அவ்வாறு செலவளித்தும் வெற்றி பெறாத உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளும் உள்ளன. வெற்றிபெறாத அரசியல் கட்சிகள் தற்பொழுது இருக்கக்கூடிய அல்லது அதிகாரத்தை நிலைநாட்டுகின்ற கோட்டபாய ராஜபக்சவை பெரிதும் ஆதரவளிக்கின்றார்கள். இந்த நிலைமைக்கு காரணம் கொரோனா என்னும் வைரஸ் தான். இதைப்பற்றிய விளக்கம் தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் என்பது உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டது ஒன்று. சீனாவை தவிர்ந்த வேறு எந்த நாடோ இவ்வாறானதொரு இரசாயனத்தை பயன்படுத்தியிருந்தால் வீற்றோ பவர் கொண்ட நாடுகள் இணைந்து அந்தநாட்டைஅழித்திருக்கும். ஆனால் சீனாவை பொறுத்தவரையில் படைப்பலத்திலும் இரசாயன பலத்திலும் உலக நாடுகளையே அழிக்கும் தன்மை கொண்டிருந்ததால் அதில் இருக்கும் சக்திகள் எந்த நாட்டிற்கும் இருக்கவில்லை. இலங்கையில் நடக்கும் பொதுத்தேர்தலையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாது. ஆகவே தமிழரசுக் கட்சிகளை பொறுத்தவரையிலும் மக்கள் மத்தியில் சரியான ஒரு தெளிவை கொடுக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது வேறு இன விடுதலை என்பது வேறு. இனவிடுதலையை பொறுத்தவரையில் காலகாலமாக இலங்கை அரசு தமிழினத்தை ஒரு அதாளபாதாளத்திற்குள் கொண்டு சென்றது. தேசியம் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தமிழினத்தை ஏமாற்றி வரும் அரசியலை செய்யலாம் என்று அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. இராணுவ ஆட்சி ஒன்றை இந்த நாட்டில் நிலை நிறுத்துவதற்கான ஒரு செயற்பாடே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. ஜனநாயகம் என்ற ஒன்று இந்த நாட்டில் இனி மூடிய போர்வையாகவே இருக்கும்.

தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு என்பது தமிழ் அரசுகளினால் மட்டுமே பெற்றுக்கொடுக்க முடியும். தமிழ் அரசியல் கட்சிகளை பொறுத்தவரையில் தங்களுக்கான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தேர்தல் என்று வந்து விட்டால் இனவாதம், மதவாதம், தேசியவாதம் என்பன தலைதூக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. தென்னிலங்கையை பொறுத்தவரையில் இனவாதத்தை வைத்தே கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டபாய ராஜபக்ச 13 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே கொரோனா மட்டுமல்ல இயற்கை அனர்த்தங்கள் மட்டுமல்ல எந்த சூழ்நிலையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஒரு முனைப்பாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட ஏனைய கட்சிகளும் பயணிக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

தந்திரம் என்பதும் இராஜதந்திரம் என்பதும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளில் பயன்படுத்த வேண்டியது. மூலோபாயம் தந்திரோபாயம் என்பது சற்று வித்தியாசமானது இதைத்தான் ஒவ்வொரு நாடுகளும் யுத்தத்திலோ அல்லது பொருளாதார ரீதியிலோ கடைப்பிடித்துக்கொள்ளும். மூலோபாயம் என்பது உதாரணமாக குளத்திலே ஒரு மீன் இருக்கிறது இதைப் பிடிப்பது தான் மூலோபாயம் பிடிப்பவர் எவராகவும் இருக்கலாம். துந்திரோபாயம் என்பது அதை எப்படி பிடிப்பது என்பது தான். இந்த தந்திரோபாயத்தை பயன்படுத்தப்படுகின்ற விதம் கூட எவ்வாறாகவும் அமையலாம். ஆனால் அந்த மூலோபாயம் எமது தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற ஒன்றாகவே அமைய வேண்டும் என்பதே இன்றைய தமிழரசு கட்சியின் நிலைப்பாடாக இருக்க வேண்டும். இல்லையேல் தமிழினம் தமிழ் மக்களுக்கான தீர்வு என்னும் விடயத்தில் ஆபத்தான கட்டத்தை சந்திக்க நேரிடும். இளைஞர்கள் இனி ஆயுதம் ஏற்று போராடும் நிலையில் இல்லை. இதன் மறைபொருள் உலகம் எதிர் நோக்கி இருக்கின்ற கொரோனா வைரஸ் எதை புலப்படுத்தி இருக்கிறது என்பதை மறைமுகமாக சொல்லி நிற்கின்றது. Covid - 19 இனி எவ்வாறான போராட்டம் இடம்பெறும் என்பதை மறை முகமாக உணர்த்தி நிற்கிறது.

சுழியோடி

# கொரோனா வைரஸும் கோட்டபாய ராஜபக்ஷவும்

கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் இன்று உலகை மிரட்டி வரும் நிலையில் சுமார் ஒரு இலட்சம் உயிர்களை காவு கொண்டது மட்டுமன்றி இப்பத்தி எழுதும் வரை சுமார் 17 இலட்சம் பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அந்த வகையில் இலங்கையில் 197 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்று சீனாவில் விஸ்வரூபம் எடுத்த பொழுது இவ்வருடம் பெப்ரவரி மாதம் இலங்கை அரசு துரித நடவடிக்கையில் இறங்கியது.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டபாய முதலில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கினார். அதன் பின்னர் ஊரடங்கு உத்தரவை நாடு முழுவதும் அமுல்படுத்தினார். கொரோனா ஒழிப்பு நடவடிக்கை செயலகம் உருவாக்கி அதற்கு இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவை நியமித்தார். அத்துடன் சுகாதாரத் துறையில் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்தார். மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டது, விமானப் போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டன, வெளிநாடுகளில் இருந்து வருபவர் தனிமைப்படுத்தல் முகாம்களை உருவாக்கி அதன் மூலம் அவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அதற்கு முப்படையினரையும் ஈடுபடுத்தினார். கொரோனா தொற்று அதிகமான மாவட்டங்களை முடக்கியதுடன் ஊரடங்கு உத்தரவை தொடர்ந்து அமுலில் உள்ளவாறு நடைமுறைப்படுத்தினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தி வந்ததால் உலகளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் இலங்கை மிக குறைவாக உள்ளது. இவ்வாறான செயற்பாடு இடம் பெற்றுக் கொண்டு இருக்கும் இவ் வேளையில் மக்களுடைய அத்தியாவசியப் பிரச்சனைகளுக்கு ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் மிக காத்திரமான சில அறிவிப்புகளையும் வெளியிட்டு இருந்தார். பொருளாதார ரீதியில் வளர்ந்து வரும் இலங்கை போன்ற நாடுகள் முற்றாக முடக்கப்படும் பட்சத்தில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டிவரும் பொருளாதாரத்தினை தாங்கி நிற்கும் சுற்றுலாத்துறை விமானப் போக்குவரத்து ஏற்றுமதி வர்த்தகம் ஆடைக் கைத்தொழில் என்பன முற்றாக முடக்கப்பட்ட நிலையிலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையிலும் இவ்வாறான துணிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது சாதாரண விடயமல்ல.

குறிப்பிட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுதினமே அனைத்து அரச வங்கி தனியார் வங்கிகளில் கடன் பெற்றவர்களின் மீள் செலுத்தல் நடை முறையை 6 மாத காலம் நிறுத்தி வைக்குமாறு சுற்று நிரூபம் அனுப்பி வைக்கப்பட்டது, அத்துடன் அனைத்து வாகனங்களுக்கான லீசிங் நடைமுறையும் 6 மாத காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது, அது மட்டுமன்றி சமூர்த்தி பயனாளிகளுக்கு ரூபாய் 5000 கொடுப்பனவு அவர்கள் வீடுகளுக்கு சென்று வழங்க அறிவுறுத்தப்பட்டமை, சமூர்த்தி அற்றவர்களுக்கு நிவாரணங்கள் வழங்க முடிவு செய்தமை, மாதாந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியங்களை மிகக் காத்திரமான முறையில் கிடைக்க செய்தமை, அத்துடன் அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் எந்த பிரச்சனையும் இன்றி கிடைக்க செய்தமை, ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள வேளையில் மீன்பிடித்துறை செயற்பட அனுமதி அளித்தமை, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கட்டணங்கள் என்பன அறவிடுவதை தற்காலிகமாக பிற்போடப்பட்டமை போன்ற பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் நிலையில் நாடாளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்கட்சிகள் அழுத்தம் கொடுத்தும் அதனை கூட்டாமல் தேர்தலை வரும் மே மாதமளவில் வைப்பதற்கு ஜனாதிபதி கோத்தபாய முயற்சி எடுத்து வருவது தெரிகிறது.

இங்கு ஒரு விடயத்தை பார்ப்போமானால் இன்று உலக பொருளாதாரத்திலும் சரி சுகாதாரத்துறையிலும் சரி மிக முன்னணியில் உள்ள நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் அல்லாடும் நிலையில் இலங்கை போன்ற நாடுகள் சுகாதாரத்துறையில் அபிவிருத்தியடைந்து காணப்பட்டாலும் பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் காணப்படுகின்றது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டபாய அரசு வெற்றிபெற்று பதவியேற்கும் நிலையில் மிகவும் நலிவுற்று காணப்பட்ட பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதாக கூறி தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

உண்மையில் கடந்த 5 ஆண்டு கால நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதாரத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. அபிவிருத்திகள் கூட பெரியளவில் இடம் பெறவில்லை என்பதான குற்றச்சாட்டும் உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவுடன் கோட்டபாய அவர்கள் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆடம்பரமற்ற பதவியேற்பு நிகழ்வு, ஆடம்பரமற்ற சுதந்திர நிகழ்வு மற்றும் வேலை அற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் விவசாயத்துறையையும் கைத்தொழில் துறையையும் ஒருங்கே மிக வேகமாக அபிவிருத்தி பாதையில் பயணிக்க நடவடிக்கை எடுத்து வந்ததுடன் பாராளுமன்ற தேர்தலையும் அறிவித்து காத்திருந்த வேளையில் தான் கொரோனா ஆட்டம் ஆரம்பித்தது. தற்பொழுது ஜனாதிபதி கோட்டபாய நாடாளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்கட்சிகள் கூறிய பொழுது அதை கூட்டாமல் தேர்தலை நடத்தி 2/3 பெரும்பான்மை பெற்று விட வேண்டும் என்று முனைப்புடன் உள்ளார்.

அதற்கு அவர் கையில் இருக்கும் ஒரு துரும்புச்சீட்டு இந்த கொரோனாவை வெற்றிகரமாக ஒழிக்கும் பட்சத்தில் அல்லது அதில் முழுமையாக வெற்றியடைந்தால் வரும் தேர்தலில் தான் மிக பெரும் வெற்றியை பெறலாம் என அவர் நினைக்கலாம். அவரது நினைப்பு சரியாகவும் இருக்கலாம். ஏனெனில் 2009 இல் உள் நாட்டு போரை வெற்றிகொண்டு அதன் மூலமாக அடுத்த தேர்தலிலும் அவரது அண்ணன் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அரியணை ஏறியது போல் இப்பொழுது கொரோனா என்னும் போரில் வெற்றி பெற்று பாராளுமன்ற தேர்தலில் 2/3 பெற்றுவிட வேண்டும் என்று போராடி வருகின்றார்.



இந்நேரத்தில் அவர் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள காலத்தில் .இடம்பெற்ற சில அரசியல் தந்திரோபாயங்களை கூறலாம். முதலாவதாக வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முற்றுமுழுதாக முப்படைகளையும் அதற்கு பயன்படுத்தினார். மிகவும் ஆபத்தான செயற்பாடுகளை உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையில் அதனை முப்படையினரிடம் கொடுக்கப்பட்டது. முப்படையினரும் மனம் நோகாதபடி ஒரு செயற்பாட்டை செய்தார் கோட்டபாய.

யாழ் மிருசுவிலில் 8 அப்பாவி மக்களை படுகொலை செய்த குற்றத்திற்காக தூக்கு தண்டனை கொடுக்கப்பட்ட இராணுவச் சிப்பாயை தனது நிறைவேற்று அதிகார முறையை பயன்படுத்தி விடுதலை செய்து இராணுவத்தினரின் மனங்களை வென்றார். தற்பொழுதும் தனது பெரும்பான்மை இனமக்களின் வாக்குகளை குறிவைத்து தான் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்று வந்தது போல் இப்பொழுது நடக்க இருக்கும் தேர்தலில் வெற்றி பெற முயல்கின்றார் என்பது மிகத் தெளிவாக தெரிகின்றது. ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களின் மனங்களை வென்றால் தான் இம்முறை தேர்தலில் 2/3 பெற முடியும். தான் சார்ந்த பெரும்பான்மை மக்களை சந்தோஷப்படுத்துவதோ அல்லது படையினரை சந்தோஷ ப்படுத்துவதோ பௌத்த தேரர்களை சந்தோசப்படுத்துவதோ தேர்தலில் எதிர் விளைவுகளை கொண்டு வரலாம். இப்பொழுது கொரோனாத்தொற்றை மையமாக வைத்து தனது சாணக்கிய அரசியலை செய்வாராயின் அது மிகப்பெரிய முட்டாள் தனம் ஆகும்.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் வந்த தலைவர்கள் தங்கள் பெரும்பான்மை என்ற கர்வம் தலைக்கேறியமையால் சிறுபான்மை தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாமல் அது மிகப் பெரிய கோர யுத்தத்தை உருவாக்கி பல தமிழ் சிங்கள முஸ்லிம் உயிர்களை காவு கொண்டது. ஒட்டு மொத்த இலங்கையும் இதற்கு முகம் கொடுத்தது. ஒருவாறு யுத்தம் முடிவடைந்த பின்னர் வந்த நல்லாட்சி அரசும் தமிழ் மக்களை மிகவும் முட்டாளாக்கி சென்றது. தற்பொழுது ஆட்சி பீடமேறிய கோட்டபாய அவர்கள் தான் தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆணையில் வெற்றி பெற்றேன் என்பதற்கமைய தனது செயற்பாடுகளை செய்து வருகின்றார். எதிர் வரும் பொதுத் தேர்தலில் 2/3 பெரும்பான்மையை பெற்று இலங்கை துரித கதியில் அபிவிருத்தி பாதைக்கு இட்டு செல்ல வேண்டுமாயின் தமிழ் மக்களின் வாக்குகள் தேவைப்படும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற வேண்டுமாயின் தமிழ் மக்களின் மனங்களை முதலில் வெல்ல வேண்டும்.

கொரோனா தொற்றை வெற்றி கொண்டேன் தமிழ் மக்களுக்கும் பாகு பாடு இன்றி நிவாரணம் வழங்கினேன் பல சலுகைகளை வழங்கினேன் ஆகவே தமிழ் மக்கள் தனக்கு வாக்குகள் அளிப்பார்கள் என்பது தவறான கணிப்பாகும். தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய அற்ப சலுகைகளை விட காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தூக்கு தண்டனை உள்ளான இராணுவச் சிப்பாயை விட்டது போல தமிழ் அரசியல் கைதிகளில் சிலரையாவது விடுதலை செய்து தனது நல்லெண்ண செயற்பாட்டை காட்ட வேண்டும். கொரோனாத் தொற்றை காரணம் காட்டி நாடு முழுவதும் இராணுவ நிலையை பிரசன்னப்படுத்தி வரும் நிலையில் கொரோனா தாக்கம் முடிவடைந்ததன் பின்னர் வடகிழக்கில் தொடர்ந்தும் இராணுவ பிரசன்னம் தொடரும் என்ற அச்சம் தற்பொழுது வடகிழக்கில் தமிழ் மக்களுக்கு உருவாகியுள்ளது. அதனை முதலில் தெளிவுபடுத்த வெண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சரியான முடிவு ஒன்றை கொடுக்க வேண்டும். வடகிழக்கிற்கான அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் வேண்டும். பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் மாகாணசபை தேர்தலையும் நடாத்த வேண்டும் இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக தமிழ் மக்களின் மனங்களை ஓரளவேனும் வெல்ல முடியும். கொரோனா வைரஸை இலங்கையில் இருந்து முற்றாக துடைத்தொழிக்க ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் எவ்வாறு மிக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றாரோ அதே போல் சிறுபான்மை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கும் தீர்வு கொடுப்பாராயின் வர இருக்கும் தேர்தலில் பெரும்பான்மை மக்களின் வாக்குகள் மட்டுமல்ல சிறுபான்மை தமிழ் மக்களின் வாக்குகளையும் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

தாயகத்தான்

# கொரோனா வைரஸை பயன்படுத்தி அரசியல் செய்ய கூடாது மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவேண்டும் - முழக்கம் - முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா



யாழ் மாவட்டத்தின் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான கள நிலவரம் ஆபத்தை எட்டுகிறது இது குறித்து மாவை சேனாதிராஜா அவர்களின் கருத்து பின்வருமாறு

இன்று எங்களின் தமிழ் பிரதேசங்கள் குறிப்பாக வடபகுதியில் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டால் பண்டங்களின் விலை மிகஅதிகமாக இருப்பதை அனைவரும் அவதானிக்க கூடியதாக இருக்கிறது. அதை விட வறுமை கோட்டின் கீழ் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் போரில் ஈடுபட்டு தொழிலில்லாமல் இருக்கின்ற போராளிகளாக இருந்தவர்கள் மற்றும் நலிவடைந்திருக்கிறவர்கள் ஊட்டச்சத்து அற்றவர்களாக இருக்கின்றவர்கள் ஒரு தொழிலும் இல்லாமல் இருப்பவர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பதாக கூறினாலும் அந்த நிதி இன்னும் எங்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை. அவ்வாறு சமூகத்தில் அடிமட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு இன்னும் நிவாரணங்களோ அல்லது நிதி உதவியோ அல்லது அவர்களுக்கான வாழ்வாதாரங்களோ முழுமையாக இன்னும் கிடைக்க பெறாமல் இருக்கின்றது. அதைவிட நேற்று ஒரு அறிவித்தலை நாங்கள் பார்த்தோம். அமைச்சரவை தீர்மானமாக இருக்கலாம். அரிசியின் விலை 90 ரூபாவாகவும், பச்சையரிசியின் விலை 85 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதாவது அது எங்களுடைய பிரதேசங்களில் அறிய முடியாமல் இருக்கிறது.

உண்மையில் அவசர பரிமாற்றலின் போது நெல் கொள்வனவு செய்கின்ற அரசினுடைய நிறுவனங்கள் 50 ரூபாய்க்கு நெல் விளைச்சல் கொள்வனவு யாழ்ப்பாணத்திலும் மிகக் குறைவு. கிளிநொச்சியில் அல்லது வன்னி பிரதேசங்களில் அல்லது கிழக்கு மாகாண பிரதேசங்களில் எல்லாம் 50 ரூபாய்க்கு நெல்லை கொள்வனவு செய்கின்றார்கள். ஆனால் அந்த நெல்லை குத்தி இங்கே விற்கும் பொழுது அவர்கள் உதவிகள் கிடைக்காத மற்றும் நலிவடைந்திருக்கின்ற மக்கள் அந்த நெல்லை பகிரங்கமாக சந்தையில் 125 ரூபாய்க்கு கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை இருக்கின்றது. அவ்வாறாக அனைத்து பண்டங்களின் விலையை பார்க்கின்ற காரணத்தினால் அரசு நிதியுதவி அல்லது நிவாரணங்களை கொடுக்காமல் இருக்கின்றமையால் உதவி கிடைக்காது அடிமட்டத்திலே இருக்கின்ற மக்கள் அதை கொடுத்திருந்தாலும் அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைமை ஒரு மோசமான நெருக்கடியை அந்த மக்களுக்கு பசி பட்டினியை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைமையே இருக்கிறது என்பதே எமது அவதானிப்பாக இருக்கிறது.

இரண்டாவதாக சொல்லக்கூடிய விடயம் அரசு ஒழுங்கு மட்டத்திலே, அதிகார மட்டத்திலே அமைச்சரவை மட்டத்திலே பிரதமர் ராஜபக்ச அவர்கள் கட்சித்தலைவர்களை அழைத்து இடைக்கிடை பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றார். நாங்கள் வேண்டுகோள் விடுத்தது என்னவென்றால் அதைப்போன்று ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் இருந்தவர்கள் அவர்களுடன் கலந்து பேசி ஆராய்ந்து அரசு தீர்மானங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் என்ன குறைநிறை இருக்கின்றது இன்னும் அதை எவ்வாறு சரிப்படுத்த வேண்டும், என்னென்ன பிரச்சனைகள் இருக்கின்றது என்றும் மக்களின் செய்திகளுடனும் தற்பொழுது பாராளுமன்ற பிரதிநிதிகளாக இல்லாவிட்டாலும் கட்சியினுடைய பிரதிநிதி களாக இருப்பவர்களும் இருக்கின்றார்கள். தற்பொழுது ராஜபக்ச அவர்கள் ஏற்கனவே பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த கட்சிகளினுடைய பிரதிநிதிகளுடனும் தான் பேச்சு வார்த்தை நடத்துகின்றார். அவ்வாறு செய்தால் ஓரளவேனும் அதிகார மட்டத்திலிருந்து மக்களினுடைய குறை நிறைகளை கேட்டு தீர்மானம் எடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக இருக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த வேண்டுகோள்களை நான் ஆளுநருடனும், மாகாணசபை பிரதம செயலாளர் அவர்களுடனும், அரசாங்க அதிபரிடத்திலும் பேசியதன் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றேன். பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு போதிய நிதியை வழங்கி அவர்களே இந்த நெல்லை பெற்று அண்டிய மாவட்டங்களில் பொல நறுவை பிரதேசங்களில் கூட கொழும்புக்கு சென்று வருபனவற்றின்விலை அதிகரிப்பிற்கு காரணமாக இருக்கக்கூடும். அயல் மாவட்டங்களிலேயாழ்ப்பாணமாவட்டத்திற்கு வெளியே இருக்கின்ற மாவட்டங்களில் இருக்கின்ற நெல் கொள்வனவு செய்கின்ற பரிமாற்றலில் கூட அவர்களிடம் இருந்து இந்த பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நெல்லை கொடுத்து அவர்கள் அந்த நெல்லை குத்தி அவர்கள் விற்கும் பொழுது குறைந்த விலைக்கு கொடுக்கக்கூடியதாக இருக்கும். அதை நாங்கள் வற்புறுத்தி இருக்கின்றோம்.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு போதிய நிதியை அவர்களின் தேவையின் அடிப்படையில் கொடுக்க வேண்டும். அவர்கள் திருப்பி அதை செலுத்தலாம். இவ்வாறான ஆலோசனைகளை நாங்கள் வழங்கி இருக்கின்றோம்.

கொரோனா வைரஸ் நோய் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை நாங்கள் பூரணமாக நம்பித்தான் ஆக வேண்டும். வேறு வழியில்லை ஆனால் முன்கூட்டியே இந்த நோயை தடுக்கக்கூடிய தடுப்பூசி முறை பரவலாக இடம்பெற செய்ய வேண்டும். அதைவிட எல்லாம் அந்த அந்த இடங்களில் இருந்தாலும் முடிந்தளவிற்கேனும் முன்கூட்டியே அந்த பொது மக்களை குறிப்பாக நோயாளர்களாக இருப்பவர்கள், குழந்தைகளாக இருப்பவர்கள், நோயுற்றிருப்பவர்கள் அதற்கு அப்பால் உள்ள நலிவடைந்திருக்கின்ற மக்கள் மத்தியிலே கொரோனா வைரஸ் இருக்கிறதா என்ற பரிசோதனைகளை செய்யும் நடவடிக்கைகளை எடுப்பது ஒரு தேவையாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான ஒரு முன்னோடியா இருக்க முடியும். அதை விட இந்த ஊரடங்கு சட்டத்தை நாங்கள் நீடிப்பது தேவையாக இருந்தாலும் மக்கள் சந்தையில் பொருட்கள் பண்டங்களை வாங்கும் பொழுதும் மருத்துவமனைக்கு முன்னாலும் கூட அவர்கள் பெரும் கூட்டமாக நீண்ட நேரம் இந்த நடு வெயிலிலே நிற்க வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. இவற்றை தவிர்க்க கூடியதாக அவர்களுக்கு இந்த மருந்துகள் கிடைப்பதற்கான உதவிகளை செய்யக்கூடிய வகையில் கொண்டு சென்று கொடுத்தாலும் ஒவ்வொரு நாளும் மருத்துவமனைகளை திறவுங்கள் என்று கூறிய போதும் நகர்ப்புறங்களிலும் ஏனைய இடங்களிலும் கூட்டம் கூட்டமாக மக்கள் நெரிசலில் நீண்ட நேரம் செலவழிக்க வேண்டிய நிலையை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதற்கு எல்லாம் மாவட்ட மத்தியிலே மாவட்ட பிரதிநிதிகள், அரசாங்க ஆளுநர், அரசாங்க அதிபர்கள், மாகாண பிரதம செயலாளர் போன்றவர்கள் சுகாதார துறையை சேர்ந்தவர்கள் மற்றும் பல துறைகள் வர்த்தக துறையை சேர்ந்தவர்கள் அனைவருக்கும் கட்டாயமாக அனைத்து ஆளுநர்களும் பேச வேண்டும் என்பதை நான் வற்புறுத்தி இருக்கின்றேன். அவர்கள் ஏன் பொருட்களை அதிக விலைக்கு விற்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது என்பதை ஆராய்ந்து அவர்களுடைய உதவி கட்டாயமாக தேவை தனியார் வர்த்தக சமூகத்திற்கும் கூட. அவர்களுடைய உதவிகளை பெறக்கூடிய பேச்சுவார்த்தைகளையும் நடத்துவது மாவட்ட மட்டங்களில் அது மிகவும் தேவையாக அல்லது இந்த பிரச்சனைகளுக்கு விலை அதிகரிப்பு குறைப்பை கட்டுப்படுத்துவதற்கு அவர்களுக்கும் உதவியாக இருக்கக்கூடியதாக முடியும் அதையும் செய்ய வேண்டுமென்று தான் நாங்கள் கருதுகின்றோம்.

கேள்வி: நிலைமையை பொறுத்தவரையிலே மருந்துவ வசதிகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். மருத்துவ வசதிகள் தற்பொழுது எப்படி இருக்கின்றது?

பதில் : மருந்துகள் வாங்கக்கூடிய நிலைமைகள் இருக்கிறது. ஆனால் அவர்கள் நீண்ட நேரம் மருத்துவமனைக்கு முன்னாள் மிகவும் கொடுமையான வெயிலில் காவல் நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே அனைத்து மருந்துகளும் கிடைக்கின்றதா என்பதை என்னால் நிரூபிக்க முடியாமல் இருக்கின்றது. சில மருந்துகள் கிடைக்காமல் இருப்பதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

மேலதிகமாக கூற வேண்டுமானால் ஜனாதிபதியும் பிரதமரும் அவர்களுடைய அரசியல் தலைவர்களுமாக கட்சியிலே அங்கம் வகிப்பவர்கள் அதிகமாக எடுக்கின்ற தீர்மானங்களை அவர்கள் விரும்பியவாறு நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதற்காக நிதி நடை முறைகளில் ஏற்கனவே சென்ற பாராளுமன்றத்தில் அதாவது சம்பளம் அதிகமாக வழங்குவது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி கோருகின்ற அதிகாரம் பாராளுமன்றத்தினால் அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு பிரேரணையை சமர்ப்பித்த போது அரசுக்கு அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இனியாவது அவ்வாறு தொடர்ந்து நிதி நடைமுறைகளை நிதியை அல்லது கடனை கோருகின்ற தேவை தற்பொழுது கொரோனா வைரஸினால் அதிகரித்து இருக்கின்ற காரணத்தினால் பாராளுமன்றத்தை கூட்டி அல்லது அதிகாரங்களை பெற வேண்டிய ஒரு தேவையிருந்தால் கட்சித் தலைவர்களினுடைய கூட்டத்தை நடத்தி எடுக்கின்ற முடிவுகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தினூடாக அந்த நிதி பயன்பாடுகளை கையாளலாம். அதைப்போன்று தேவையான சட்டங்களை திருத்தி அமைக்க வேண்டுமானால் அல்லது பாராளுமன்ற தேர்தல் நடத்துகின்ற விடயங்களில் தீர்வுகளை காண வேண்டுமாக இருந்தால் பாராளுமன்றத்தை கூட்டி கட்சித்தலைவர்களை கூட்டி அந்த தீர்மானங்களை எடுப்பது தான் பொருத்தமானதாக இருக்குமே தவிர ஜனாதிபதி தனக்கு இருக்கும் அதிகாரங்களிற்கு அப்பால் சென்று தான் நினைத்தவாறு உதாரணமாக தேர்தல் ஆணையகம் உச்ச நீதிமன்றத்திலே இந்த தேர்தலைநடத்துகின்றதிகதியைநியமிப்பதில் ஒரு ஆலோசனை வழங்கியிருந்தது உச்ச நீதிமன்றத்திலே அதைப்பற்றி ஆராய வேண்டுமென்று அதை நிராகரித்துவிட்டார் ஜனாதிபதி அவர்கள்.

இந்த விடயங்களில் மிகவும் நிதானமான சட்டபூர்வமான நிபுணத்துவம்வாய்ந்தசட்டத்துறையினருடன் கலந்து ஆலோசித்து ஜனாதிபதி அந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். வேண்டுமானால் நீதியரசரிடத்தில் வேண்டுகோள் விடுத்து அவரிடத்திலும் ஆலோசனை பெறலாம். அவ்வாறான நிலைமைகள் எல்லாம் அவசியமாக இருக்கும் என்பது தான் எனது கருத்தாக இருக்கின்றது.

ஆரணியன்

# கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டுவரும் நாடுகளில் இலங்கை மற்றும் சீனா முன்னணியில்



கொரோனா வைரஸ் தொற்றுநோயை கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டுவரும் நாடுகளில் இலங்கை மற்றும் சீனா முன்னணியில் உள்ளதாகவும் இலங்கையின் சுகாதார கட்டமைப்பு மற்றும் முன்னாயத்த ஏற்பாடுகள் மிக சிறப்பானதாக அமைந்துள்ளதாகவும் சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் உலக அளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ள ஆய்வொன்றின் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் 'கொவிட் -19' கொரோனா வைரஸ் தொற்றுநோயை கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ள நாடுகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இலங்கை மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே கொரோனா வைரஸ் தொற்றுநோயை கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் நாடுகளாக அவர்கள் கூறியுள்ளனர்.

சீனாவை பொறுத்த வரையில் கொவிட் -19 பாதிக்கப்பட்ட முதல் தொற்றுநோயாளி இனங்காணப்பட்ட பின்னரே அவர்கள் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். எனினும் சீனா இப்போது வரையில் 81 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா தொற்றுநோயாளர்களை அடையாளம் கண்டுள்ளதுடன் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தொற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

எனினும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாவின் தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் உயரிய மட்டத்தில் உள்ளது என கூறும் அந்த ஆய்வு, இலங்கையை பொறுத்தவரை வேறெந்த நாடுகளும் மேற்கொள்ளாத மிகச் சரியான பாதுகாப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக கூறியுள்ளனர்.

அனைத்து நாடுகளுமே கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த பின்னரே தமது நாட்டினை பாதுகாக்க நடவடிக்கை எடுத்த நிலையில் இலங்கை அவ்வாறு அல்லாது கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவ முன்னரே முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இப்போது வரையில் இலங்கையின் மருத்துவ கட்டமைப்பு மற்றும் வைரஸை கட்டுப்படுத்த முன்னெடுக்கும் சுகாதார வேலைத்திட்டம் மிக உயரிய மட்டத்தில் இருப்பதாகவும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

# கொரோனாவிலிருந்து தற்காத்து கொள்வது எப்படி?



உங்கள் கைகளை குறைந்தது 20 நொடிகள் கழுவ வேண்டும். சோப்பு மற்றும் நீரைக் கொண்டு நன்றாக கழுவுங்கள்.

உங்கள் கண்கள், மூக்கு மற்றும் வாய் இவற்றை அடிக்கடி தொடுவதை தவிர்த்திடுங்கள்.

இருமினாலோ அல்லது தும்மினாலோ டிஷ்யூ பேப்பர்களை பயன்படுத்துங்கள்.


கைக்குட்டைகளை பயன்படுத்தினால் மற்றவர்கள் அதனை தொடாமல் நீங்களே பாதுகாப்பான முறையில் Wash செய்திடுங்கள்.

கைக்குட்டை அல்லது டிஷ்யூ பேப்பர் இல்லை என்றால் உங்கள் முழங்கை மூட்டுப்பகுதியை பயன்படுத்தி இருமுங்கள்.


கைப்பிடிகள், லிஃப்ட் பொத்தான்கள், ஸ்விட்ச் போன்று பொதுவாக மக்கள் பயன்படுத்தும் பொருட்களை தவிர்த்திடுங்கள்.

பேருந்து பயணங்கள், பூங்காக்கள், கோவில்கள், விசேஷங்கள் போன்ற பொதுவாக மக்கள் பயன்படுத்தும் இடங்களை தவிர்த்திடுங்கள்.

தொகுப்பு :- ஹாசினி



# பிராந்தியச் செய்திகள்



## யாழில் நிறைவடையும் கொரோனா காலம்: ஒரு வாரமாக தொற்றாளர்கள் இல்லை

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணத்தில் ஒருவரும் கொரோனா தொற்றில் அடையாளப்படுத்தப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.யாழ். போதனா வைத்தியசாலையில் சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பலருக்கும் கொரோனா தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.


இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எவருக்கு கொரோனோ தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணத்தில் கொரோனோ தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்படவில்லை.அதேநேரம், கொரோனா சந்தேகத்தில் தற்போதும் 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.



## பாடசாலைகள் மீள ஆரம்பிக்கும் தினம் தொடர்பில் வெளியான தகவல்!

2020ம் ஆண்டிற்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் மே மாதம் 11ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.முன்னதாக, எதிர்வரும் 20ம் திகதி இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவிருந்தன.

எனினும், நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கருத்தில் கொண்டு, இரண்டாவது தவணைக்கான கல்வி நடவடிக்கைகளை மே 11ம் திகதி ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.கொரோனா வைரஸ் பரவலையடுத்து கடந்த மாதம் 12ம் திகதி அனைத்து அரச பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



මාධ්‍ය නිවේදනය
ஊடக வெளியீடு
PRESS RELEASE

Tel : 011 2 386572 Fax : 011 2 333717
ජනාධිපති මාධ්‍ය අංශය, ජනාධිපති කාර්යාලය, කොළඹ 01
ஜனாதிபதி ஊடகப் பிரிவு, ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01
President's Media Division, President's Office, Colombo 01

නිවේදන අංක - 51
2020-04-11 ප.ව 9.25 ට

දෙවැනි පාසල් වාරයේ ආරම්භය මැයි 11ට කල් යයි ....

දෙවැනි පාසල් වාරය ලබන මැයි 11, සඳුදා ආරම්භ කිරීමට තීරණය කර තිබේ.

මීට පෙර දෙවැනි පාසල් වාරය අප්‍රේල් මස 20, සඳුදා ඇරඹීමට නියමිතව තිබිණ.

කොරෝනා වෛරසය පැතිරයාමත් සමග එය පාලනය කිරීමට රජය ගත් ක්‍රියාමාර්ග තවදුරටත් ඉදිරියට ගෙන යමින් පාසල් දරුවන් ආරක්ෂා කර ගැනීම පිණිස මෙලෙස නැවත පාසල් ආරම්භ කරන දිනය දීර්ඝ කරන ලදී.

පාසල් නොපැවැත්වෙන කාලය තුළ ශිෂ්‍ය ශිෂ්‍යාවනට සිය අධ්‍යාපනය කරගෙන යාම සඳහා දුරස්ථ පහසුකම් හැකි උපරිමයෙන් සැලසීමට රජය සැලසුම් කර ඇත.

විශ්වවිද්‍යාල ආරම්භ කරන දිනය වත්මන් තත්ත්වය සමාලෝචනය කොට විශ්වවිද්‍යාල බලධාරීන්ගේ සහ විශ්ව විද්‍යාල ප්‍රතිපාදන කොමිසන් සභාවේ එකඟත්වය අනුව තීරණය කරන ලෙස උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශයට දැනුම් දී තිබේ.

මොහාන් සමරනායක
අධ්‍යක්ෂ ජනරාල්
ජනාධිපති මාධ්‍ය අංශය

2020-04-11

Email : pmdnews2020@gmail.com Web : www.president.gov.lk Facebook : www.facebook.com/gotabayar/

## மரக்கறிகளை கொள்வனவு செய்ய தீர்மானம்

விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுவரெலியா மற்றும் தம்புள்ளை விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்யவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.



இதற்காக நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்ட செயலாளர்களுக்கு 350 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் வசமுள்ள அனைத்து மரக்கறிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தம்புள்ளை பகுதியில் 25 முதல் 30 இலட்சம் கிலோகிராம் மரக்கறிகளையும் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து 3 முதல் 5 இலட்சம் கிலோகிராம் மரக்கறிகளையும் கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பதாக அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இந்த மரக்கறிகளை இராணுவத்தினர், மாவட்ட செயலாளர்களின் வழிகாட்டலின் கீழ் அந்தந்த பகுதி மக்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் செயலணி குறிப்பிட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல் – நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையினை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களுடன் இணைந்து, மனித இனத்தை பாவங்களில் இருந்து விடுவிப்பதற்காக இயேசு நாதர் சிலுவையில் தனது வாழ்வை அர்ப்பணித்து உயிர்த்தெழுந்த உயிர்ப்புப் பெருவிழாவை இன்று பக்தியுடன் நினைவுகூர்கின்றனர்.

தனது ஆன்மாவையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்திக்கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். கிறிஸ்தவ பக்தர்கள் இயேசுவின் துன்பம், மரணம் மற்றும் உயிர்ப்பை நினைவுகூர்ந்து ஆன்மீக கிரியைகளில் ஈடுபடுகின்றனர்.

அதன் மூலம் வளர்த்துக்கொள்ளும் அமைதியும் சாந்தமும், நாட்டில் உள்ள ஏனைய சகோதர இனங்களுக்கிடையிலான அன்பு, சமாதானம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உதவும் என நான் நம்புகின்றேன்.

தற்போது கொரோனா வைரஸ் பரவுவதுடன் உலக மக்கள் முகம்கொடுத்துள்ள பாரிய அனர்த்தம் அனைத்து பக்தர்களையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இயேசு பிரானின் தெய்வீக மகிமையினால், துன்பத்திற்குள்ளாகியுள்ள அனைத்து மக்களுக்கும் ஆறுதலை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

உயிர்ப்புப் பெருவிழா இந்நாட்டில் உள்ள கிறிஸ்தவ பக்தர்களுக்கு கடந்த காலங்களில் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. எனினும் கடந்த வருடம் அது மிகவும் துன்பகரமான ஒன்றாக மாறியது. இன்றும் அந்த கவலை நீங்கவில்லை.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. அதேபோல் அத்தகைய சம்பவங்களை தாய்நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டுவதற்கும் அரசாங்கம் மிகுந்த பொறுப்புடன் உள்ளது.

நாடும் மக்களும் சவால் மிகுந்த சுகாதார அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினதும் சுகாதார அதிகாரிகளினதும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வீடுகளில் இருந்து இயேசு கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இயேசுவின் போதனைகளை நினைவுகூர்ந்து ஆன்மாவை பாவத்திலிருந்து விடுவிப்பதற்கு உங்களுக்கும், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் இயலுமாவதாக என பிரார்த்திக்கின்றேன்" எனத் தெரிக்கப்பட்டுள்ளது.






Week 13: Saturday, 28th March 2020 to
Friday, 3rd April 2020

| Rank | Channel Name | (000s) sum Week 13 |
|---|---|---|
| 1 | DD National | 1596923 |
| 2 | Sun TV | 1306360 |
| 3 | Dangal | 1151414 |
| 4 | SONY SAB | 892566 |
| 5 | Sony MAX | 803023 |
| 6 | Big Magic | 750781 |
| 7 | Zee Cinema | 682751 |
| 8 | STAR Gold | 642375 |
| 9 | NICK | [illegible] |
| 10 | ETV Telugu | [illegible] |



## கர்நாடகாவில் அதிகம் வசூல் செய்த டாப் 5 தமிழ் படங்கள்

தமிழ் சினிமாவிற்கு தற்போது உலகம் முழுவது நல்ல வர்த்தகம் இருந்து வருகிறது. அந்த வகையில் வெளி மாநிலமான கர்நாடகாவில் தமிழ் படங்கள் பார்ப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

இந்நிலையில் கர்நாடகாவில் அதிகம் வசூல் செய்த டாப் 5 தமிழ் படங்கள் எது என்பதை பார்ப்போம்...

2.0- ரூ 47 கோடி

கபாலி- ரூ 36 கோடி

தர்பார்- ரூ 21 கோடி

பிகில்- ரூ 20 கோடி

பேட்ட- ரூ 19 கோடி

இதில் முதல் 5 இடத்தில் ஒரு அஜித் படமும் இல்லாதது கொஞ்சம் வருத்தம் தான்.



## TRP-யில் சன் டிவியையே பின்னுக்கு தள்ளிய பிரபல சேனல்

இந்திய தொலைக்காட்சிகளில் சன் டிவி தான் எப்போதும் முதல் இடத்தில் இருக்கும். அதுவும் இந்திய அளவிலேயே நம்பர் 1 இடத்தில் இருக்கும்.

அந்த வகையில் சன் தொலைக்காட்சி இந்தியளவில் கடந்த வாரம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. இது பெரிய விஷயம் இல்லை.

முதலிடத்தில் இருப்பது டிடி நேஷ்னல், அது தான் பலருக்கும் ஆச்சரியம். ஆம், கேபிள் டிவி வந்த பிறகு டிடியை யாரும் விரும்பி பார்ப்பது இல்லை.

ஆனால், இந்த முறை முதலிடத்திற்கு வந்துள்ளது பலருக்கும் ஆச்சரியம் தான், மேலும், டிடியில் செம்ம ஹிட் அடித்த சக்திமான் சீரியலை மறு ஒளிப்பரப்பு செய்து வருகின்றனர்.

## ரத்த கரையில் சுத்தியல்..! மீண்டும் ஒரு திரில்லர் கதைக்களத்தில் விஷ்ணு விஷால்

தமிழில் வெளிவந்த வெண்ணிலா கபடி குழு படத்தின் மூலமாக கதாநாயகனாக அறிமுகமானவர் நடிகர் விஷ்ணு விஷால்.

இதன்பின் ஜீவா, இன்று நேற்று நாளை, ராட்சசன் போன்ற படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானார்.

ராட்சசன் படம் மிக சிறந்த திரில்லர் கதைக்களம் கொண்டு மிக பெரிய வெற்றியை விஷ்ணுவிற்கு தேடி தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனை போலவே தற்போது மீண்டும் மற்றொரு திரில்லர் கதைக்களம் கொண்ட, தான் நடித்திருக்கும் படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார் நடிகர் விஷ்ணு விஷால்.




தொகுப்பு :- ஹாசினி

# பிள்ளையானால் கொலை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரம் வெளியானது



சிவநேசதுரை சந்திரகாந்தனால் (பிள்ளையானால்) கொலை செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரம் வெளியாகியுள்ளதால் மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிள்ளையான் விலக்கப்பட்ட பின்னர் , கிழக்கு மாகாண முதலமைச்சராக விளங்கிய பிள்ளையான் பல கொலை சம்பவங்களுடன் தொடர்புபட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் வெளிவந்துள்ள தகவல்களின் அடிப்படையில் பிள்ளையானின் கொலைப்பட்டியல் இதோ:

**01. அரியநாயகம் சந்திரநேரு, அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர். 07/02/2005 அன்று கொலை செய்யப்பட்டார்.**

**02. நு.கௌசல்யன், மட்டக்களப்பு – அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள். 07/02/2005 அன்று கொலை செய்யப்பட்டார்.**

**03. தர்மரட்ணம் சிவராம், சிரேஷ்ட ஊடகவியலாளர். 28/04/2005 அன்று கொலை செய்யப்பட்டார்.**

**04. ஐயாத்துரை நடேசன், சிரேஷ்ட ஊடகவியலாளர். 31/05/2004 அன்று கொலை செய்யப்பட்டார்.**

**05. வன்னியசிங்கம் விக்னேஸ்வரன், திருகோணமலை மாவட்ட தமிழர் அமைப்பின் உறுப்பினர். 07/04/2006 அன்று கொலை செய்யப்பட்டார்.**

**07. சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத், உபவேந்தர் கிழக்கு பல்கலைக் கழகம். 15/12/2006 அன்று கடத்தப்பட்டு பொலன்னறுவை மாவட்டம், செவனப்பிட்டி, தீவுச்சேனை என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார்.**

**08. ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர். 25/12/2005 அன்று மட்/புனித மரியன்னை இணைப்பேராலயத்தினுள் வைத்து கொலை செய்யப்பட்டார்.**

**09. வர்ஷா ஜுட் என்னும் 6 வயது சிறுமி, 11/03/2009 அன்று திருகோணமலையில் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு கொலை செய்யப்பட்டார்.**

**10. சதீஷ்குமார் தினுஷிகா என்னும் 8 வயது சிறுமி, 28/04/2009 அன்று மட்டக்களப்பு, பூம்புகார் என்னும் இடத்தில் வைத்து கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு கொலை செய்யப்பட்டார்.**

இந்த கொலைப்பட்டியல் தொடர்பில் பொதுமக்கள் கடும் அச்சத்தில் உள்ள நிலையில் , சில தரப்புகள் பிள்ளையானை கிழக்கின் பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக மாற்ற வேண்டும் என்னும் முனைப்பில் செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்களிடம் இருந்து 5 இலட்சம் கிலோகிராம் காய்கறிகளை பெற்றது அரசாங்கம்

பொருளாதார மையங்கள் மீண்டும் திறக்கப்படும்வரை விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ் அரசாங்கம் 500,000 கிலோ கிராம் காய்கறிகளை பெற்றுக்கொண்டுள்ளது.



நுவரெலியா மாவட்டத்தில் இருந்து 300,000 கிலோகிராம் காய்கறிகளை நேற்று (சனிக்கிழமை) கொள்வனவு செய்ததாக அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இதேவேளை தம்புள்ளையில் இருந்தும் 200,000 கிலோகிராம் காய்கறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் நாட்டில் தற்போது காய்கறி தட்டுப்பாடு இல்லை என்றும் அறிவித்துள்ளது.

மேலும் விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை பெற்றுக்கொள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு உத்தரவை மீறிய 23,500பேர் கைது

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி வரையான காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய 23,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.




இந்த காலப்பகுதியில் 6,500 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கொழும்பு , கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய 19 மாவட்டங்களிலும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 06 மணிக்கு ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

# வடமாகாண மக்களுக்கு விசேட அறிவிப்பு! 24 மணிநேர அவசர அழைப்பு



வடமாகாணத்தில் தொற்றா நோய் நிலைமையுடையவர்கள் நோய்நிலை தீவிரமடைகின்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக அழைக்க இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.அவ்வாறு அவசர தேவைகள் ஏற்படும் போது 1990 என்கின்ற அவசர அம்புலன்ஸ் இலக்கத்தை தொடர்புகொண்டு வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இருதயநோய், நீரிழிவு, சிறுநீரகநோய் நிலைமைகள் மற்றும் ஆஸ்துமா போன்ற சுவாசத்தொகுதி நோய் உள்ளிட்ட தொற்றா நோய் நிலைமையுடையவர்கள் அவசர மருத்துவ சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்படின் அது தொடர்பில் அறிவிப்பதற்காக தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.நோய் நிலைமைகள் தீவிரமடைந்து அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற போதிலும் உரிய நேரத்தில் வைத்தியசாலைகளுக்கு வருகைதராதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதா சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நோயாளர்கள் அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டதையும் அறிய முடிவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.எனவே மேற்படி தொற்றா நோய்களுடைய நோயாளர்கள் தமது நோய்நிலை தீவிரமடைகின்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக 1990 என்கின்ற அவசர அம்புலன்ஸ் இலக்கத்தை தொடர்புகொண்டு வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.இவ் அம்புலன்ஸ் சேவையினை பெற்றுக்கொள்வதில் ஏதாவது தடங்கல்கள் அல்லது தாமதங்கள் இருப்பின் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பு இலக்கங்களான 021 222 6666 அல்லது 021 221 7982 உடனடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் 40-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் பலி - உருக்கமான தகவல்கள்



அமெரிக்காவில் கொரோனா வைரசுக்கு 40-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் பலியாகி விட்டதாக உருக்கமான தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் ருத்ர தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. ஊரடங்கு, சமூக இடைவெளி பராமரிப்பு, முக கவசம் அணிதல் என்று கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும் கூட அமெரிக்கர்களை கொரோனா வைரஸ் விடாமல் துரத்தி வருகிறது. 5 லட்சத்துக்கும் அதிகமான அமெரிக்கர்களின் உடல்களுக்குள் கொரோனா வைரஸ் புகுந்து ஆட்டம் போட்டு வருகிறது.நேற்றுமுன்தினம் ஒரே நாளில் கொரோனா வைரசுக்கு 2,108 பேர் பலியாகி உள்ளனர். அதற்கு முந்தைய இரு நாட்களில் தொடர்ந்து கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்தனர்.

கொரோனா வைரசுக்கு இந்தியர்களும், இந்திய வம்சாவளியினரும் பலியாகி வருவது மிகுந்த வேதனை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.இதுவரை 40-க்கும் மேற்பட்ட இந்தியர்களும், இந்திய வம்சாவளியினரும் கொரோனா வைரசால் உயிரிழந்து இருப்பது அவர்களின் குடும்பங்களை தீராத சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

பலியானவர்களில், அதிகபட்சமாக கேரள மாநிலத்தை சேர்ந்த 17 பேர் அடங்குவார்கள்.குஜராத்தை சேர்ந்த 10 பேர், பஞ்சாப் மாநிலத்தின் 4 பேர், ஆந்திராவின் 2 பேர், ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ஒருவரும் பலியாகி இருப்பதாக வாஷிங்டனில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. மற்றவர்களைப் பற்றிய விவரம் தெரிய வரவில்லை. உயிரிழந்தவர்களில் ஒருவர் மட்டும் 21 வயதானவர், மற்ற அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது. கொரோனாவின் மையமாக நியூயோர்க்தான் உருவாகி உள்ளது. இங்கும், அதன் அண்டை மாநிலமான நியூஜெர்சியிலும் இந்தியர்களும், இந்திய வம்சாவளியினரும் அதிகளவில் வசித்து வருகின்றனர். கொரோனாவுக்கு பலியானவர்களில் 12-க்கும் மேற்பட்டவர்கள் நியூஜெர்சி மாகாணத்தில், குறிப்பாக ஜெர்சி நகரின் லிட்டில் இந்தியா மற்றும் ஒக் ட்ரீ ரோடு பகுதியில் வசித்து வந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

நியூயோர்க்கில் மட்டுமே இந்திய வம்சாவளியினர் 15 பேர் கொரோனாவால் இறந்திருக்கிறார்கள். பென்சில்வேனியாவிலும், புளோரிடாவிலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர். டெக்சாஸ் மற்றும் கலிபோர்னியாவில் தலா ஒரு இந்திய வம்சாவளியினர் கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர்.பலியான இந்தியர்களில் குறிப்பிடத்தகுந்தவர், சுன்னோவா அனலிட்டிகல் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அனுமந்தராவ் மரே பள்ளி ஆவார். அவர் நியூஜெர்சியின் எடிசன் நகரில் மரணம் அடைந்தார். அவருக்கு மனைவியும், 2 மகள்களும் இருக்கிறார்கள்.

நியூஜெர்சி நகரத்தில் உள்ள இந்திய சதுக்கத்தில் பிரபலமான சந்திரகாந்த் அமின், தனது 75-வது வயதில் கொரோனா வைரஸ் தாக்கி உயிரிழந்துள்ளார்.நியூஜெர்சியில் வீட்டுக்குள் ஒரு இந்திய வம்சாவளி இறந்து கிடந்ததும் தெரியவந்தது. நியூஜெர்சியில் 400 இந்திய வம்சாவளியினரும், நியூயோர்க்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு ஆளாகி, மருத்துவ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டு உள்ளனர். நியூயோர்க்கில் உள்ள இந்திய வம்சாவளி கார் டிரைவர்கள் பலரும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். பல சமூக தலைவர்களையும் கொரோனா வைரஸ் விட்டு வைக்கவில்லை. நியூயோர்க், நியூஜெர்சி பகுதியில் 12 இந்தியர்கள் பலியாகி இருப்பதாகவும், இதற்கு முன்னர் இப்படி ஒரு துயர நிகழ்வை பார்த்தது கிடையாது எனவும் நியூஜெர்சி மாகாணத்தில் ரியல் எஸ்டேட் தொழில் நடத்தி வருகிற இந்தியர் பாவேஷ் தவே தெரிவித்தார். இவர் முகக்கவசங்கள் வழங்குவதற்கு நிதி திரட்டி வருகிறார்.

இதற்கிடையே கொரோனா வைரஸ் தாக்கிய இந்தியர்களையும், இந்திய வம்சாவளியினரையும் காப்பாற்ற பிளாஸ்மா என்று அழைக்கப்படக்கூடிய ரத்த அணுக்களை ஏந்தி செல்லும் நிறமற்ற திரவம் தேவைப்படுகிறதாம்.இதை தானமாக வழங்க கோரி சமூக வலைத்தளங்களில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது என வாஷிங்டன் தகவல்கள் கூறுகின்றன. ஜெர்சி நகரில் ரசிக் பட்டேல் என்ற 60 வயது இந்திய வம்சாவளி முதியவருக்கு 2 நாட்களுக்கு முன்னர் செயற்கை சுவாச கருவி அகற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர் நிலைமை மோசமாகி உள்ளது. இது அங்குள்ள இந்திய வம்சாவளியினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. பாதிப்புக்குள்ளாகி உள்ள இந்தியர்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் பல தரப்பிலும் உதவும் கரங்கள் நீண்டுள்ளன. நியூஜெர்சி மெடிக்கல் சென்டரில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்திய வம்சாவளியை சேர்ந்த அஜித், சச்சின், சஞ்சய்மோடி உள்ளிட்டோர் இலவச சைவ உணவு வழங்கி வருகின்றனர். நியூயோர்க், நியூஜெர்சி, மேரிலாந்து, புளோரிடா, பென்சில்வேனியா உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள உணவு விடுதிகளில் இருந்து இலவசமாக உணவுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. பாஸ்டனில் உள்ள ஆஸ்பத்திரியில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு உலக இந்து கவுன்சிலின் அமெரிக்க கிளை உணவு அளித்து வருகிறது. உள்ளூர் பொலீசாருக்கு 85 ஆயிரம் கையுறைகளையும் அந்த அமைப்பு வழங்கி உள்ளது.

இப்போது அமெரிக்கவாழ் இந்தியர்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் உள்ள ஒரே ஆறுதல், இந்த நெருக்கடியான தருணங்களில் பல தரப்பில் இருந்தும் உதவிக்கரங்கள் நீளுவதுதான்.

தொகுப்பு :- சப்தஹரி

# உலகில் பலம்வாய்ந்த இயக்கமாக 1990–2009 வரை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் – ஐ.நா. அறிக்கை

**கடந்தவார தொடர்ச்சி...**

தமிழ் விடுதலை இயக்கமாக ஆரம்பித்த எல்.ரி.ரி.ஈ, நாளடைவில் மிகவும் ஒழுங்கு சார்ந்த மற்றும் தமிழ் தீவிரவாதக் குழுக்களிடையே மிகவும் தேசியவாதத்தைக் கொண்டதாகவும் மாறி 1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை அரவணைக்கும் தலையாய சக்தியாக தலைதூக்கியது. இக்காலகட்டத்தின் போது, எல்.ரி.ரி.ஈ. ஏனைய தமிழ் குழுக்களை பணிய வைப்பதற்காக கூடிய அளவிலான வன்முறைப் போக்கினைக் கடைப்பிடித்ததோடு, தாமாகவே நியமிக்கப்பட்டட தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாம் என்பதை அவர்கள் வலியுறுத்தினர். அதன் புதிரான தலைவர், வேலுப்பிள்ளை பிரபாகரன், முழுமையான விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் அதிகாரத்துடன் கோரியதோடு பக்தி சார்ந்ததொரு ஆதரவாளர்களை உருவாக்கினார்.

தமக்குள்ளே எந்தவொரு கருத்து வேறுபாட்டையும் சகிக்காததோடு, அரசாங்கத்துடன் செயற்படுவோர் அல்லது ஒத்துழைப்போர் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டு அநேகமாக எல்.ரி.ரி.ஈ. இனால் கொலை செய்யப்பட்டார்கள். தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எல்.ரி.ரி.ஈ. இன் வன்முறை தமிழ் சமுதாயத்தினுள் ஆழ்ந்த பயத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்தது. கருணாவின் பிரிவு புலிகளுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை பாகம் 03 32. எல்.ரி.ரி.ஈ. தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தோற்றுவித்து, இராணுவ, அரசியல் மற்றும் சிவில் இலக்குகளுக்கு எதிராக அதனைப் பிரயோகித்தது.

இந்திய பிரதம மந்திரி ராஜீவ் காந்தி (1991) அத்துடன் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச (1993) மற்றும் அதிக எண்ணிக்கையிலான இலங்கை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதவாதப் போக்குடைய தமிழ் அரசியல் தலைவர்களின் கொலைகளுக்கு ஆண் மற்றும் பெண் எல்.ரி.ரி.ஈ. தற்கொலைக் குண்டுதாரிகள் பொறுப்பாகவிருந்தனர். அநேகமான சந்தர்ப்பங்களில் பல சிவில் பிரஜைகளின் உயிர்களைப் பறித்த பொருளாதார மற்றும் சமய இலக்குகள் மீதும் அது தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டது. எல்.ரி.ரி.ஈ. புறந்தள்ளும் அரசியலைப் பின்பற்றியதோடு, 1990 ஆம் ஆண்டில் வடக்கில் தம் வீடுகளில் இருந்து முஸ்லிம் மக்களை துரத்தியதோடு, அதன் கட்டுப்பாட்டில் இருந்த எல்லைக் கிராமங்களில் வசித்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தது. தமிழ் மக்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அதிகமாக வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தலை எல்.ரி.ரி.ஈ பிரயோகித்தது. வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில், சிறுவர்கள் சிறுமிகள் உள்ளிட்ட வயது குறைந்தவர்களை படைவீரர்களாகப் பாவிப்பதில் எல்.ரி.ரி.ஈ ஈடுபட்டதும் தெரிந்த விடயமே. அதன் நடைமுறை காரணமாக கனடா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஐக்கிய இராசதானி மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகியவற்றை உள்ளிட்ட நாடுகள் இவ்வமைப்பை தடை செய்ததோடு, 2001 செப்டெம்பர் 11 இன் பின்னர் தடை செய்வது மேலும் தீவிரமடைந்தது.

33. 1990ஆம் ஆண்டுகள் தொடக்கம்

மே 2009 வரை, எல்.ரி.ரி.ஈ. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய நிலப்பரப்பினை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்ததோடு, அரசாங்கப் படையினரும் எல்.ரி.ரி.ஈ யினரும் பிரதேசத்தின் கட்டுப்பாட்டுக்காக போட்டியிட்ட போது, நாளடைவில் இந்த எல்லைக் கோடு மாற்றமடைந்தது. நடப்பிலுள்ள ஒரு தேசத்தை அது செயற்படுத்தி தானே அது என்ற தோற்றத்தை முன்வைக்க முனைந்தது. இதனை நோக்காகக் கொண்டு நன்கு வடிவமைக்கப்பட்ட சர்வதேச உபாயம் ஒன்றை அது அபிவிருத்தி செய்ததோடு, தன் கட்டுபாட்டில் உள்ள பிரதேசத்தில் அதன் காவல் அமைப்பு, சிறைச்சாலைகள், நீதி மன்றங்கள், உள்வரவுத் திணைக்களம் வங்கிகள், மற்றும் சில சமூக சேவைகள் ஆகியவற்றை நிறுவியது. தரை, வான் மற்றும் கடல் திறன்கொண்ட முன்னேறியதொரு இராணுவத்தையும் அது கட்டியெழுப்பியதோடு, விரிவான தொரு உளவு பார்க்கும் அமைப்பின் உதவியுடன் கெரில்லா மற்றும் பாரம்பரிய நடைமுறைகளையும் மேற்கொண்டது.



34.வன்முறை மற்றும் அரச அடக்குமுறை காரணமாக அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் மற்றும் ஏனையோர் சிறந்த பொருளாதார சந்தர்ப்பங்களுக்காக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்ததால் இலங்கையின் புலம்பெயர்ந்த தமிழ் சனத்தொகை உலகின் பல பாகங்களிலும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் வரை 1980ஆம் ஆண்டுகள் முதல் வளர்ச்சியடைந்து புலம்பெயர்ந்தவர்கள் யுத்தம் நடைபெற்ற காலம் பூராவும், அவர்களுள் சிலர் ஏன் ஏது என்று கேட்காது எல்ரிரிஈ இனருக்கு ஆதரவு வழங்கி, யுத்தம் நடைபெற்ற முழு காலப்பகுதியிலும் நிதிகளை வழங்கி, எல்ரிரிஈ தவறிழைக்கவில்லை என வாதாடி முக்கியதொரு பங்கினை வகித்தனர். ஆயினும், ஆதரவு அனைத்தும் சுயமாகவே வழங்கப்படவில்லை. இலங்கைக்கு வெளியே அதிக எண்ணிக்கையிலான தமிழ் அகதிகள் வாழும் நாடுகளுக்கு எல்.ரி.ரி.ஈ. அச்சுறுத்தலை உள்ளிட்ட அதன் நடைமுறைகளை விரிவாக்கி, அதனை தனிநாட்டுக்கான தமிழ் மக்களின் அபிலாசை என வருணனை செய்து அதனை அடைவதற்கான வழியாகப் பிரயோகித்தது. அது எவ்வித விமர்சனத்தையும் சகிக்காததோடு, எல்ரிரிஈ இன் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் குரல் எழுப்புவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அளிக்கவில்லை.

(14) ஆ. சட்டத்தின் நல்லாட்சி மற்றும் மனித உரிமைகள் படிப்படியாக அழிந்துபோதல்

35. இலங்கையின் 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு நாட்டின் கூறுபடாத சுபாவத்தை வலியுறுத்துவதோடு, தேசத்தின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் மற்றும் ஆயுதப் படைகளின் தளபதி ஆக பதவி வகிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவருக்கு பரவலான மற்றும் குவிசார்ந்த அதிகாரங்களை வழங்குகிறது“ மேலும், தனது வரையறைக்கு உட்பட்டவாறு ஜனாதிபதி எந்தவொரு அமைச்சுக்கும் தலைமை தாங்கலாம். தற்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு, நிதி மற்றும் திட்டமிடல், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய ஐந்து அமைச்சுக்களுக்குப் பொறுப்பாகவுள்ளார். உயர் நீதிமன்றம்மற்றும்மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான தலைவர்களையும் நீதி பதிகளையும் நியமிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தையும் அரசியல் யாப்பு நிலைநாட்டுகிறது. மேலும், நெருங்கிய குடும்பத்தினரை ஜனாதிபதி நியமிப்பதற்கான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதோடு, அத்தகைய தெரிவுகளைப் பாவிப்பதால், தற்போதைய அரசாங்கம் உறவினர்களுக்குச் சலுகை அளிக்கிறது என்ற விமர்சனத்தை எதிர்நோக்குகிறது.

36. அவசரகாலச் சட்டத்தின் கீழான நீடிக் கப்பட்ட காலப்பகுதிகள், அரசியல் யாப்பு அனுமதித்த அவசரகால ஒழுங்குவிதிகளைப் பாவித்தல், ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தல், அது போன்று நீதித்துறை உள்ளிட்ட அரச நிறுவனங்களில் அரசியல் ஈடுபாடு அதிகரித்தல், அத்தோடு சுயாதீனமாகத் தட்டிக் கேட்பதை நலிவடையச் செய்தல். 1989 இல் சிறியதொரு இடைவெளியைத் தவிர 1983 முதல் 2001 வரை மற்றும் மீண்டும் 2005 முதல் இன்று வரை அவசரகாலச் சட்ட ஆட்சி அமுலில் இருந்து வருகிறது. ஏனைய விடயங்களுள், தற்போது அமுலில் உள்ள அவசரகால ஒழுங்குவிதிகள் 1979 ஆண்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்துடன் சேர்ந்து, அரசாங்கத்துக்கு அசாதாரணமான அதிகாரங்களை வழங்குவதோடு, அதிகாரத்தின் துஷ்பிரயோகம் மற்றும் உரிமைகள் மீறல்கள் பற்றி ஆராய்வதற்கான நீதி மன்றங்களின் ஆளுமையைக் கட்டுப்படுத்துகின்றன.

ஏனைய சட்டங்களும், குறிப்பாக 1982ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டவிலக்க உரிமைச் சட்டம் (1977 ஆகஸ்ட் முதல் 1988 டிசம்பர் 16 வரைக்கும் ஏற்புடைத்தான) பாரிய உரிமைமீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான அரசாங்கத்தின் கடமையை மிகுந்த அளவில் நலிவடையச் செய்துள்ளன. சட்டத்தை அமுல் செய்வதற்காக அல்லது வேறு விதமாக பொது மக்களின் அக்கறைக்காக நல்ல நோக்குடன் சட்டப்படி அல்லது சட்டவிரோதமாக எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் எந்தவொரு அமைச்சர், இராணுவ அதிகாரி அல்லது அவர்கள் பணிப்பின் கீழ்செயற்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதை இது தடை செய்துகிறது. தண்டனையில் இதருந்து விலக்கீட்டுரிமையை முறை சார்ந்ததாக்குவதன் மூலம், சட்டவிலக்க உரிமைச் சட்டம் பயங்கரமானதொரு முன்மாதிரியை வழங்குகிறது.

37. அநேகமாக சூத்திரகாரர்கள் தண்டிக்கப்படாத காணாமற் போதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட மனிதஉரிமைகள் மீறல்கள், அத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு எதிரான முறைசார்ந்த சட்ட மற்றும் அரசியலமைப்பின் கீழான பாதுகாப்புக்கள் இருந்த போதிலும், நேருவதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்கு இந்நடைமுறைகள் உதவியுள்ளன.

தொடரும்...

சுழியோடி




## COVID-19 காரணமாக 2,000 ஸ்மார்ட் கைப்பேசிகளை நன்கொடையாக வழங்கும் சாம்சுங்

முன்னணி ஸ்மார்ட் கைப்பேசி நிறுவனமான சாம்சுங் சுமார் 2,000 ஸ்மார்ட் கைப்பேசிகளை வைத்தியசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கவுள்ளது.

அதாவது பிரித்தானியாவில் உள்ள NHS Nightingale வைத்தியசாலைகளுக்கே இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளது.

குறித்த வைத்தியசாலைகள் COVID-19 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக புதிய தற்காலிக மருத்துவமனைகளை கட்டமைப்பதுடன், மேலதிக மருத்துவ வசதிகளையும் உருவாக்கி வருகின்றனர்.

இவர்களுக்கு உதவும் முகமாகவே சாம்சுங் நிறுவனம் குறித்த கைப்பேசிகளை வழங்கவுள்ளது.

அதுமாத்திரமன்றி தொற்றுநீக்கக்கூடிய UV இயந்திரங்கள் உட்பட மேலும் சில இலத்திரனியல் உபகரணங்களை வழங்க சாம்சுங் நிறுவனம் முன்வந்துள்ளது.




## வட்ஸ் அப் Notification ஐ Mute அல்லது Unmute செய்வது எப்படி?

உலகின் பெரும்பாலான நாடுகள் தற்போது லொக்டவுன் செய்யப்பட்டுள்ள நிலையில் வட்ஸ் அப் போன்ற செயலிகள் பிரதான தகவல் பரிமாறும் ஊடகமாக மாறியுள்ளன.இதனால் ஒரே நாளில் அதிகளவான தகவல்களை பெற்றுக்கொள்ள நேரிடுகின்றது.இவ்வாறு தகவல்களுக்கான Notification வரும்போது உண்டாகும் சத்தம் எரிச்சலை உண்டாக்கலாம்.

எனவே இதனை Mute செய்து வைத்திருக்கலாம்.இவ்வாறு Mute செய்ய வேண்டும் எனில் குறித்த குழுவினை தெரிவு செய்து குழுவின் பெயர் மீது கிளிக் செய்யவும்.

இப்போது தோன்றும் மெனுவில் Mute Notificaiton என்பதை தெரிவு செய்து செயற்படுத்தவும். அல்லது வலது பக்க மேல் மூலையில் உள்ள மூன்று புள்ளிகளை கிளிக் செய்து தோன்றும் மெனுவில் Mute Notification என்பதை தெரிவு செய்யவும்.அவ்வாறே Mute செய்த குழுக்களை Unmute செய்யவும் முடியும்.




## பயனர்களிடம் பேஸ்புக் விடுக்கும் வேண்டுகோள்

தற்போது நிலவிவரும் கொரோனா அச்சுறுத்தலை தொடர்ந்து பேஸ்புக் நிறுவனம் பயனர்களிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

அதாவது கொரோனா வைரஸ் அறிகுறிகள் தொடர்பிலான தகவல்களை சினேகபூர்வமாக பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுள்ளது.



Carnegie Mellon பல்கலைக்கழகத்தில் கொரோனா வைரஸ் தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

இவ் ஆய்விற்காகவே குறித்த தகவல்களை பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுள்ளது பேஸ்புக்.

இதற்காக அமெரிக்காவில் உள்ள தனது பயனர்களுக்கு இணைப்பு ஒன்றினை பேஸ்புக்கில் காண்பிக்க ஆரம்பித்துள்ளது.

குறித்த இணைப்பில் கிளிக் செய்து கொரோனா வைரஸ் தொடர்பான கருத்துக்கணிப்பில் பங்குகொள்ள முடியும்.

இதன் மூலம் ஆய்வை தொடர்வதற்கான தகவல்களை பயனர்கள் பகிர்ந்துகொள்ள முடியும்.

## நிலவிற்கு கார்கோவினை அனுப்புவதற்கு நாசா தெரிவு செய்த விண்வெளி நிலையம் எது தெரியுமா?

2024 ஆம் ஆண்டு நிலவின் மேற்பரப்பிற்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தினை நாசா ஆரம்பிக்கவுள்ளது.


இதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டில் கட்டணம் செலுத்தப்பட்ட 8 கார்கோ பொதிகளை அனுப்புவதற்கும் நாசா விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக கலிபோர்னியாவில் உள்ள Masten Space Systems எனும் நிறுவனத்தினை தெரிவு செய்துள்ளது.

குறித்த கார்கோவில் 9 வகையான உபகரணங்கள் கொண்டு செல்லப்படவுள்ளன.

இவை நிலவின் மேற்பரப்பில் உள்ள கலவைகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த திட்டமானது 12 நாட்களை உள்ளடக்கியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 75.9 மில்லியன் டொலர்கள் செலவாகும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.





**நீ ஊமையாய் இருக்கும் வரை**
**உலகம் செவிடாய் தான் இருக்கும்**

-சேகுவேரோ-




## கொரோனாவினால் நின்றுபோன பிரபலங்களின் திருமணங்கள்!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பிரபல வீரர்களின் திருமணங்கள் தள்ளிப்போயுள்ளன.



அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அடம் ஷம்பா, பெண்கள் அணி இடது கை சுழற்பந்துவீச்சாளர் ஜெஸ் ஜோனஸ்சன், ஜேக்சன் பேர்ட், மிட்செல் ஸ்வெப்சன், அண்ட்ரிவ் டை, டிஆர்கி ஷார்ட், கேட்லின் பிரைய்ட், மெக்டேர்மோட் ஆகியோருக்கு எப்ரல் மற்றும் மே மாதங்களில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இப்போது கொரோனா அச்சுறுத்தலால் இவை பிற்போடப்பட்டுள்ளன. இதேபோன்று நிச்சயதார்த்தம் நிறைவுற்ற மக்ஸ்வெல், கேட் கம்மின்ஸ் திருமண திகதிக்காக நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சகல கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறாமையால், அவர்கள் ஊதிய இழப்பையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் கால்பந்தாட்ட வயதெல்லை 24 ஆக அதிகரிக்கப்படலாம்

அடுத்த வருடத்துக்குப் பிற்போடப்பட்டுள்ள டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் ஆடவர் கால்பந்தாட்டத்துக்கான வயதெல்லையை பீபா உயர்த்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமையாக ஒலிம்பிக் கால்பந்தாட்டத்துக்கான வயதெல்லை 23 ஆகும்.




எனினும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் ஒரு வருடத்தால் பிற்போடப்பட்டுள்ளதால் இவ் வருடம் விளையாட தகுதிபெறவிருந்த வீரர்களுக்கு அடுத்த வருடம் விளையாட சந்தர்ப்பம் வழங்கும் வகையில் வயதெல்லையில் பீபா மாற்றத்தை ஏற்படுத்தலாம் என கருதப்படுகின்றது.

1997 ஜனவரி 1 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்கள் டோக்கியோ 2020 ஒலிம்பிக் கால்பந்தாட்டத்தில் விளையாட அனுமதிக்கப்படலாம் என கருதப்படுகின்றது. எனினும் இது குறித்து பீபாவின் தீர்மான சபை இன்னும் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை.

## விஸ்டனின் சிறந்த கிரிக்கெட் வீரராக பென் ஸ்டோக்ஸ்

இங்கிலாந்து கிரிக்கட் அணியின் தலைசிறந்த சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ் இந்த வருடத்திற்கான விஸ்டனின் சிறந்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

கிரிக்கெட் வீரர்களின் பைபிள் என்று வர்ணிக்கப்படும் 'விஸ்டன்' இதழ் ஆண்டுதோறும் சிறந்த வீரர்களை தேர்வு செய்து கௌரவிக்கும். அந்த வகையில் 2019-2020 சீசனில் சிறப்பாக விளையாடிய வீரர்களில் இங்கிலாந்தை சேர்ந்த பென் ஸ்டோக்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஆஷஸ் தொடர் டிரா ஆவதற்கும், இங்கிலாந்து 50 ஓவர் உலக கோப்பையை வெல்வதற்கும் முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் அவரை விஸ்டன் சிறந்த வீரராக தேர்வு செய்துள்ளது.



பிளின்டா:.ப் 2005-ம் ஆண்டு சிறந்த விஸ்டன் விருதை வென்றிருந்தார். அதன்பின் 15 ஆண்டுகள் கழித்து இங்கிலாந்து வீரரான பென் ஸ்டோக்ஸ் தற்போது வென்றுள்ளார்.

இவருடன் ஜோப்ரா ஆர்சர், பேட் கம்மின்ஸ், மார்னஸ் லாபஸ்சேன், வீராங்கனைகள் எலிஸ் பெர்ரி, சிமோன் ஹார்மர் ஆகியோரையும் குறிப்பிட்டிருந்தது.

ஜோப்ரா ஆர்சர் உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடரில் சிறந்த பந்து வீச்சாளர் என்பதை நிரூபித்தார். ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவாலாக விளங்கியிருந்தார்.

## தடைப்பட்டுள்ள கிரிக்கெட் மிகுந்த பலத்துடன் மீண்டெழும் மிக்கி ஆர்த்தர்




கொரோனா தொற்று நோய் காரணமாக முழு உலகமே முடங்கிப்போயிருப்பது துரதிர்ஷ்டவசமானது. ஏனைய விளையாட்டுக்களைப் போன்று சர்வதேச கிரிக்கெட்டும் தடைப்பட்டுள்ளது. அது மிகுந்த பலத்துடன் மீண்டெழும் என இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுனர் மிக்கி ஆர்த்தர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஊடகப் பிரிவுக்கு அளித்த பேட்டியிலேயே மிக்கி ஆர்த்தர் இவ்வாறு குறிப்பிட்டார். வீரர்கள் தத்தமது வீடுகளிலேயே தஞ்சமடைந்துள்ள நிலையில் பயிற்றுனர் குழாம் நேரத்தை எவ்வாறு கழிக்கின்றது என அவரிடம் கேட்கப்பட்டபோது.

"எமது பயிற்றுனர் பதவிக்காலத்தில் முதல் மூன்று மாதங்களில் நடந்தவற்றை சீர்தூக்கிப் பார்க்கின்றோம். அத்துடன் இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள மிக முக்கிய தொடர்கள் குறித்த திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம். வீரர்களது முன்னேற்றம், மூவகை கிரிக்கெட்களில் எங்களால் முன்வைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் கட்டமைப்பு, நெறிமுறை, இலக்குகள், தயார்படுத்தல், வீரர்கள் கொண்டுள்ள ஆர்வம் என்பன குறித்து நாங்கள் மகிழ்வுறுகின்றோம்" என பதிலளித்தார்.

உடற்தகுதி, போட்டிகளுக்கு தயாராகுதல், மனோரீதியான தயார்நிலை ஆகியன குறித்து என்ன வகையான திட்டங்களை வீரர்களுக்கு முன்வைத்துள்ளீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த மிக்கி ஆர்த்தர்,

"ஒவ்வொருக்கும் தனிப்பட்ட உடற்தகுதி திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களது உடற்தகுதியைத்தொடர்ந்துபேணுவதற்கானவழிமுறைகளைவீடுகளிலிருந்தேபின்பற்றுமாறு அறிவிறுத்தியுள்ளோம். எமது உடற்கூற்று ஆலோசகர்களான டிஷான் பொன்சேகா, போல் கூவ்ரி ஆகியோர் ஒவ்வொரு வீரருக்கான திட்டம் குறித்து செயற்படுகின்றனர். நானும் வீரர்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளை வழங்கிவருகின்றேன். பலம், பலவீனம், மனோபாவம், உடற்தகுதி, நுட்பத்திறன் ஆகியன குறித்தே நாம் வீரர்களுடன் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டுவருகின்றோம்' என்றார்.

உங்களது பயிற்றுவிப்பின்கீழ் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் முழுமையான வெற்றியை இலங்கை ஈட்டியது. இது சரியான திக்கை நோக்கி இலங்கை அணி நகர்வதை எடுத்துக்காட்டியது அல்லவா? அத்துடன் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை இலங்கை வீரர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்ள எண்ணினர். ஆனால் அந்தத் தொடர் கைவிடப்பட்டது. இந்நிலையில் முன்னோக்கிய நகர்வு குறித்து என்ன கூறவிரும்புகின்றீர்கள் என அவரிடம் வினவப்பட்டபோது,

'சர்வதேச ஒருநாள் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை வெற்றிகொண்டது மிக்க மகிழ்ச்சி தருகின்றது. வீரர்களின் கடும் உழைப்புக்கு கிடைத்த பரிசாக அந்த வெற்றி அமைந்தது. ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட ஆற்றல் வெளிப்பாடுகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. சரியான திட்டமிடல், பங்களிப்பு, நம்பிக்கை ஆகியவற்றின்மூலம் வெற்றிபெற முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது.

'இங்கிலாந்துக்கு எதிரான தொடர் கைவிடப்பட்டமை உண்மையில் ஏமாற்றம் அளிக்கின்றது. இத் தொடர் பின்னர் விளையாடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. ஸிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடர் எமது அணியின் பெரு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியது என நான் கருதுகின்றேன்.

இந்த கிரிக்கெட் சுற்றுப் பயணம் மிகவும் கடினமானது. அங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப திறமையை வெள்ளிப்படுத்த வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்ப எமது வீரர்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி அசத்தினர்.

அதன் மூலம் எமது வீரர்கள் மத்தியில் நம்பிக்கை எழுந்தது. அதே போன்று மற்றைய அணிகளுடன் வெற்றியைத் தொடர முடியும் என நாங்கள் அறிந்துகொண்டோம். எமது டெஸ்ட் அணிக்கு சில இலக்குகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு சொந்த மண்ணிலும் அந்நிய மண்ணிலும் வெற்றிபெறுவதற்கான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம்" என்றார் மிக்கி ஆர்த்தர். மேற்கிந்தியத் தீவுகளுடனான இருபதுக்கு 20 தோல்வி மற்றும் எதிர்காலத் திட்டம் குறித்து மிக்கி ஆர்த்தரிடம் கேட்கப்பட்டபோது,

"பலம் மிக்க மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரின்போது எமது இருபதுக்கு 20 அணியில் முன்னேற்றம் தேவை என்பது உணர்த்தப்பட்டது. இங்கு வருகை தருவதற்கு முன்னர் பாகிஸ்தான் இருபதுக்கு 20 அணியுடன் இருந்துள்ளேன். எனவே எது தேவை என்பதை நன்கு அறிவேன். எம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு வெற்றிபெறுதற்கான முறைமைகளை கட்டி எழுப்புவதே இப்போதைய தேவை. வீரர்கள் மத்தியில் மாயைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தி எமது பலத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும்" என்றார்.

# உலக செய்திகள்

## சீனாவில் 99 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்



சீனாவில் நேற்று (சனிக்கிழமை) மட்டும் 99 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இது முந்தைய நாளினை விட இரட்டிப்பான அதிகரிப்பு என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மார்ச் 6 ஆம் திகதிக்கு பின்னர் இது மிகப்பெரிய தினசரி எண்ணிக்கை என்றும் ஏறக்குறைய அனைத்து புதிய தொற்றுநோயாளிகளும் வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளை உள்ளடக்கியது.

குறிப்பாக 99 வழக்குகளில் இரண்டு மட்டுமே உள்நாட்டில் பரவின என சீனாவின் தேசிய சுகாதார ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.


இதேவேளை சீனாவின் வணிக மையமான ஷாங்காயிலும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கே கொரோனா வைரஸ் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று (11) நகரத்தில் 52 புதிய கொரோனா வைரஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என்றும் இவை அனைத்தும் வெளிநாட்டிலிருந்து பயணம் செய்த சீன பிரஜைகள் சம்பந்தப்பட்டவை என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஷாங்காயின் புதிய நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் 51 பேர் ரஷ்யாவில் இருந்து வருகைதந்தவர்கள் என்றும் மற்றுமொருவர் கனடாவில் இருந்து வந்தவர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் தொற்றுநோய்களின் எண்ணிக்கை இப்போது 82,052 ஆகவும், இறப்பு எண்ணிக்கை 3,339 ஆகவும் உள்ளது.

## இயற்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த செயற்கைக்கோள் படத்தை வெளியிட்டது நாசா




கொரோனாவால் இயற்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து நாசா செயற்கைக்கோள் படத்தை வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாக பரவி வரும் நிலையில், அதனால் உலக மக்கள் பலரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

எனினும் இதனால் இயற்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, சுற்றுச்சூழல் மாசு கணிசமாக குறைவடைந்து வருவதாக கூறப்படுகின்றது.

வாகன பயன்பாடுகளின் குறைவு மற்றும் தொழிற்சாலைகள் மூடல் ஆகியவற்றின் காரணமாக காற்று மாசுபாடு கணிசமாக குறைந்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், நாசா வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் தரவுகளின்படி, வடகிழக்கு அமெரிக்கா முழுவதும் காற்று மாசுபாடு கடந்த சில வாரங்களில் சுமார் 30 வீதம் குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், உலகின் ஏனைய பகுதிகளையும் நாசா விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## குவாத்தமாலாவில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ்

குவாத்தமாலாவில் நேற்று (சனிக்கிழமை) கொரோனா வைரஸ் தாக்கம் உறுதியான மேலும் 16 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மத்திய அமெரிக்க நாடான குவாத்தமாலாவில் மொத்தம் 153 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி அலெஜான்ட்ரோ ஜியாமத்தே கூறினார்.

இதேவேளை குவாத்தமாலாவில் இதுவரை மூன்று பேர் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



## மக்களுக்குத் தேவை ரொட்டிகளே தவிர துப்பாக்கிகள் அல்ல- பாப்பரசர் பிரான்சிஸ்



மக்களுக்குத் தேவையானது ரொட்டிகளே தவிர துப்பாக்கிகள் அல்ல எனத் தெரிவித்துள்ள பாப்பரசர் பிரான்சிஸ், ஆயுத உற்பத்தி மற்றும் ஆயுத வர்த்தகங்களை நிறுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்த நாளை ஈஸ்டர் திருநாளாக உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவப் பெருமக்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், கத்தோலிக்கர்களின் தலைமையிடமான வத்திக்கானில் பாப்பரசர் பிரான்சிஸ் தலைமையில் ஈஸ்டரை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை நடந்தது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மிகச் சில கார்தினல்கள் மட்டுமே இந்தப் பிரார்த்தனையில் பங்கேற்றனர்.

பிரார்த்தனையின் முடிவில் பேசிய பாப்பரசர், கருக்கலைப்பு மற்றும் அப்பாவி உயிர்களைக் கொல்வது நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஆயுத உற்பத்தியையும், ஆயுத வர்த்தகத்தையும் நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# கொரோனா COVID -19
# இலங்கையின் நாளாந்த அறிக்கை

2020.04.12

| நோய் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் |
|---|---|
| 165 | 199 |
| **குணமடைந்தவர்கள்** | **மரணமடைந்தவர்கள்** |
| 054 | 07 |

## உலக அளவில் கொரோனா வைரஸால் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் 09 நாடுகளின் விபரம்

| நாடுகள் | தொ.எ/கை | மரணங்கள் | குணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| USA | 532,879 | 20,577 | 30,453 |
| Spain | 163,027 | 16,606 | 59,109 |
| Italy | 152,271 | 19,468 | 32,534 |
| France | 129,654 | 13,832 | 26,391 |
| Germany | 125,452 | 2,871 | 57,400 |
| China | 82,052 | 3,339 | 77,575 |
| UK | 78,991 | 9,875 | 344 |
| Iran | 70,029 | 4,357 | 41,947 |
| Turkey | 52,167 | 1,101 | 2,965 |

## 181 பேருடன் ஒரே வீட்டில் வாழும் இந்தியர் – அசைக்க முடியாத சாதனை



39 மனைவிகள்.! 94 குழந்தைகள்.! மொத்தம் 181 பேருடன் ஒரே வீட்டில் வாழும் இந்தியர்.! அசைக்க முடியாத சாதனை.

நாம் வாழும் புனித பூமி இந்த இந்திய நாடு. குடும்பம், கலாச்சாரம் இவற்றிற்கு பெயர் போனது நம் இந்திய நாடு. முன்பெல்லாம் மக்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தனர். சொந்த பந்தங்களுடன் குடும்பமே குதூகலமாக இருக்கும். ஆனால், தற்போதைய வாழ்க்கை முறை நம் வாழ்வில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துவிட்டது. மக்கள் தனித்து வாழ்வதையே விரும்புகின்றனர். கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல், வேலை, படிப்பு, தனிக்குடித்தனம் இப்படி ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு குடும்ப உறுப்பினர்கள் வேறு வேறு இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இன்றைய காலத்தில் குடும்பத்தில் நான்கு பேர் இருந்தாலே சண்டை வந்துவிடுகிறது.

இந்நிலையில், 39 பெண்களை திருமணம் செய்து குடும்பம் நடத்திவருகிறார். இந்தியாவின் மிசோராம்மை சேர்ந்த இந்த சியோனா சானா என்ற நபர்.39 பெண்களை திருமணம் செய்துகொண்ட சியோனா சானாவிற்கு மொத்தம் 94 குழந்தைகள் உள்ளனர். அவர்களில் சிலருக்கு திருமணம் முடிந்துள்ளநிலையில் 14 மருமகள்கள் உள்ளனர். ஒரு பெண்ணை கட்டியே சமாளிக்க முடியாத இந்த காலகட்டத்தில் 39 பெண்கள் .அதுமட்டும் இல்லாமல், 34 பேரக்குழந்தைகள் என மொத்தம் சியோனா சானவை சேர்த்து 181 பேர் ஒரே வீட்டில் வசித்துவருகின்றனர். மேலும் ஒரு தொழிற்சாலை போல் இயங்கும் இந்த குடும்பத்தில், ஒருநாளைக்கு சுமார் 50 கிலோ வரை சமையலுக்கு அரிசி பயன்படுத்துகிறார்களாம். 39 மனைவிகள்.! 94 குழந்தைகள்.! மொத்தம் 181 பேருடன் ஒரே வீட்டில் வாழும் இந்தியர்.! அசைக்க முடியாத சாதனை.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 12.04.2020 அன்று வெளியிடப்பட்டது.